ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 4 விக்கிரம௵ மார்கழி மீ கதிர் 6

ஜனவரி-1941

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—		1
அன்றாட உலகம்	—		18
அப்ரஹாம் லிங்கன்	—		24
சுவாமி விவேகானந்தர் உலகுக்களித்த நிதி		"ப்ரஹ்மசாரி"	25
சில காலண்டர் விநோதங்கள்	—		34
தமயனின் கடிதம்-15	—	"தேவிதாசன்"	35
சமுதாய ஒப்பந்தம்	—	வெ. சா.	36
ஆதிமனிதன் எப்படி வியாபாரம் செய்தான்?		ஏ. பரமேசுவரன் பிள்ளை	43
இந்தியக் கைத்தொழில் அபிவிருத்திக்கு இலேசானவழி		"ஹரிபரன்"	49
சிலப்பதிகாரம்-வேட்டுவ வரி	—	மா. சர்மா, B. A (Hons.)	52
பண்டித மோதிலால் நேரு	—	"ஒரு காங்கிரஸ்வாதி"	59

ஓம்

நோய்கள் தீர வேண்டுமானால்!

தி ஸதானந்த ஆயுர்வேதிக் மெடிஸன்ஸ் & ஸோப்ஸ் லிமிடெட் கம்பெனியாரால் தலைவர் சுவாமி ஆத்மானந்த பாரதி அவர்களின் மேற் பார்வையில் பதில் மருந்துகள் சேராமல் விதிப்படியுள்ள மருந்துகள் மட்டும் கிடைக்குமிடங்களிலிருந்து தருவித்து தயார் செய்யப்பட்ட தைலம், மருந்து, சோப் முதலியவைகளை வாங்கி உபயோகியுங்கள்.

நாட்டரசங்கோட்டை பிரூஞ்சு ஆபீஸில் சிகிச்சைக்கு வருபவர்களுக்கு இலவசமாய்ப் பரீக்ஷை செய்து வியாதிகளுக்குத் தகுந்த சிகிச்சை செய்ய வைத்தியர்களும் வைத்திருக்கிறோம். வியாதியஸ்தர்களிடம் மருந்துக்கிரயமட்டிலும் வாங்கப்படும்.

தி ஸதானந்த ஆயுர்வேதிக் மெடிஸன்ஸ்
& சோப்ஸ் லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—சதானந்தபுரம் (திருவாங்கூர்)

பிரூஞ்சு ஆபீஸ்:—நாட்டரசங்கோட்டை (கோட்டயம்)

"கல்வி"

புதிய தமிழுலகைத் தோற்றுவிக்க
பர்மாவிலிருந்து வெளிவரும் மாத சஞ்சிகை

பர்மாவுக்கு வருஷ சந்தா ரூ. 1
இதர நாடுகளுக்கு ரூ. 1-8-0

விலாசம்:—
"கல்வி" நிலையம்,
251, மங்கமாரி வீதி,
இரங்கூன்.

சுவாமி விவேகாநந்தர்

ருஷ்ய சர்க்கார், ஏற்கனவே ஒரு பெரிய சப்மரீன் படையை நிர்மாணித்து விட்டதாகவும், இப்பொழுது ஒரு கப்பல் படையை நிர்மாணித்து வருவதாகவும் மாஸ்கோ ரேடியோச் செய்தி கூறுகிறது. சீக்கிரத்தில், உலகத்திலேயே மிகச் சிறந்ததாக இந்தக் கடற்படை யிருக்குமாம்.

காரியக் கமிட்டி அங்கத்தினர் ஸ்ரீ சங்கர ராவ் தேவுக்கு இன்று 18 மாத வெறுங் காவல் தண்டனை கொடுக்கப் பட்டது.

ஸ்ரீமான் எம் பக்தவத்சலத்திற்கு 9 மாதக் கடுங் காவலும் 250 ரூ அபாரதமும், தவறினால் மேற் கொண்டு 6 வாரக் கடுங் காவலும் அளிக்கப் பட்டது. இவர், சென்னையில மாஜி பார்லி மெண்டரிக் காரியதரிசி யாகும்.

ஜவகரின் சகோதரி விஜய லட்சுமி பண்டிதரின் கணவர் ஸ்ரீமான் ஆர் எஸ். பண்டிதருக்கு 15 மாத வெறுங் காவல் தண்டனை விதிக்கப் பட்டிருக்கிறது.

தென் இங்கிலாந்து, ஜெர்மன் விமானங்களால் தாக்கப்பட்டதாக சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

கரிபியன் கடலிலுள்ள யுத்த முஸ்தீபுகளைப் பார்வையிடும் பொருட்டு, அமெரிக்கத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்ட் இன்று புறப்பட்டார்.

பிரிட்டனுக்கும் ஸ்பெயினுக்கும் நிதி சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டது. ஸ்பெயினில் பிரிட்டிஷ் ஸ்தானிகரா யிருந்து வரும் சர் சாமியுல் ஹோரும் ஸ்பெயின் வெளி நாட்டு மந்திரியான ஸீனர் ஸுனரும் கையெழுத்துச் செய்தனர்,

ஸ்ரீமான் நா. அண்ணாமலைப் பிள்ளைக்கு ஒன்பது மாத வெறுங் காவல் தண்டனை கொடுக்கப் பட்டது.

ஹரி கிருஷ்ண மஹதாப்புக்கு ஒரு வருஷ தண்டனை கொடுக்கப் பட்டது. இவர் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் மாஜி அங்கத்தினர்.

இந்தியா சட்ட சபையில் இந்திய வர்த்தக சங்கப் பிரதிநிதியா யிருந்த ஸ்ரீமான் மனு சுபேதார் தன்னுடைய ஸ்தானத்தை ராஜீநாமாச் செய்து விட்டார்.

மகாத்மா காந்தி தற்போது நடைபெறும் சத்தியாக்கிரகத்தைப் பற்றி எழுதி யிருப்பதில், இந்த சத்தியாக்கிரகத்தை எவ்வளவு தூரம் வியாபிக்கச் செய்தாலும் பொது ஜனச் சட்ட மறுப்பு மட்டும் இல்லை யென்று குறிப்பிட்டிருக்கிறார்.

3 ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாருக்கு ஒரு வருஷம் வெறுங்காவல் தண்டனை.

பிரிட்டிஷ் சர்க்கார் செய்யும் முடிவுகளை இப்போது சுயேச்சை அயர்லாந்துக்குத் தெரிவிப்பதில்லையென்று காமன் சபையில் பதில் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய மாகாண மாஜி மந்திரி ஸ்ரீ சம்பூரணானந்தருக்கு பதினெட்டுமாத வெறுங் காவல தண்டனை.

ஸ்ரீமான் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாருக்கு ஒரு வருஷ வெறுங் காவல் தண்டனை.

4 ஸ்ரீமான் புலுசு சாம்ப மூர்த்தி கைது செய்து வேலூர் ஜெயிலுக்குக் கொண்டு போகப் பட்டார்.

ஜெர்மன்—ருமேனிய பொருளாதார ஒப்பந்தம் இன்று கையெழுத்திடப் பட்டது.

சென்னைக் கவர்னரின் யுத்தநிதிக்கு இன்று வரை ரூ. 6283,273—6—6 சேர்ந்திருக்கின்றதாம்.

5 ஜெயிலில் உண்ணாவிரத மிருந்து வந்த பாபு சுபாஷ் சந்திர போஸ் இன்று விடுதலை செய்யப் பட்டார்.

6 இத்தாலியப் படைகளின் பிரதம நிர்வாகி

யாகிய மார்ஷல் படாக்ளியோ பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

சென்னை விவசாயக் கடன் சட்டம் சம்பந்தமாக வந்திருந்த அப்பீல் இன்று புதிய டில்லி சமஷ்டி கோர்டில் தள்ளப் பட்டது.

ஸ்ரீமான் என். எஸ். வரதாச்சாரிக்கு ஆறு மாத வெறுங் காவல் தண்டனை.

கிரேக்க அரசர் உதவி கோரியிருந்ததற்கு ரூஸ்வெல்ட் பதிலளித் திருப்பதில் படையெடுப்பை யெதிர்த்து நிற்கும் சர்க்காருக்கும் மக்களுக்கும் உதவி செய்வதே அமெரிக்க சர்க்காரின் கொள்கையாகும். கிரீசுக்கும் இத்தகைய உதவியளிக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படுகின்றன என்று கூறியிருக்கிறார்.

8 ருமேனியாவிலிருந்து ஜெர்மனிக்கு, சமீபத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக அடுத்த வருஷத்தில் 30 லட்சம் டன் எண்ணெய் போய்ச் சேருமாம்.

9 சென்னை மேல்சபை உபதலைவர் ஸ்ரீமான் வெங்கடசாமி நாயுடுக்கு ஆறுமாத வெறுங்காவல் தண்டனை கொடுக்கப்பட்டது.

ஸ்ரீமான் அசப் அலிக்கு ஒரு வருஷக் கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டது.

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிதருக்கு நான்குமாத வெறுங்காவல் தண்டனை கொடுக்கப்பட்டது.

இந்திய சட்டசபை மெம்பர் ஸ்ரீமான் அனந்தசயனம் அய்யங்கார் 9 மாத வெறுங்காவல் தண்டனை கொடுக்கப்பட்டார்.

ஜப்பானிய அயல்நாட்டு மந்திரி மத்சுகா இன்று வெளிநாட்டுப் பத்திரிகா நிருபர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில், அமெரிக்கா ஐரோப்பா யுத்தத்தில் கலந்துகொள்ள அவசியமில்லை. அப்படி அமெரிக்கா ஜெர்மனியுடன் போர் புரிய ஆரம்பித்தால் ஜப்பான் நிச்சயமாகப் போராடும் என்று கூறினார்.

சென்னை மாஜி சட்ட மந்திரி ஸ்ரீமான் சுப்பராயனும், அவர் மனைவி ராதாபாய் சுப்பராயனும் ஆறு மாத வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டனர்.

சர்தார் வேதரத்தினம் பிள்ளைக்கு ஒன்பது மாதக் கடுங்காவல் தண்டனை கொடுக்கப் பட்டது.

பீஹார் மதுவிலக்குச் சட்டத்தின்படி தண்டிக்கப்பட்டிருந்த 218 பேர் பாட்னா ஐக்கோர்ட் தீர்ப்புக் காரணமாக விடுவிக்கப்பட்டனர்.

10 சென்னை மாஜி மந்திரிகளில் ஒருவரான ஸ்ரீமான் வி. ஐ. முனிசாமி பிள்ளைக்கு 7 மாத வெறுங் காவல் தண்டனை கொடுக்கப் பட்டது.

அஹ்ரார் தலைவர் மௌலானா கலிலுர் ரஹ்மானுக்கு ஒரு வருஷ கடின காவல் தண்டனை கொடுக்கப் பட்டது.

இந்திய மத்திய சட்ட சபை மெம்பர் ஸ்ரீமான் சந்தானத்துக்கு ஒரு வருஷக் கடுங் காவல் தண்டனை கொடுக்கப் பட்டது.

ஆச்சார்ய கிருபலானியின் மனைவி ஸ்ரீமதி சுசேத கிருபலானிக்கு ஒரு வருஷ வெறுங் காவல் தண்டனை விதிக்கப் பட்டது.

இன்று, ஹிட்லர் யுத்த தளவாட தொழிலாளர் கூட்டத்தில் 1 மணி 34 நிமிஷங்கள் பேசினார்.

11 டான்ஜியரில் உள்ள சர்வதேச நிர்வாகிகளும், பிரிட்டிஷ் நிதி மந்திரி, பிரிட்டிஷ், பிரஞ்சு, இத்தாலிய சிப்பாய்கள் யாவரும் நீக்கப்பட்டு, ஸ்பானிய பந்தோபஸ்துப் படை வைக்கப்பட்டிருக்கிறது. டான்ஜியர் ஜிப்ரால்டருக்கு சமீபத்தில் உள்ள ஸ்தலம்.

அஸ்ஸாம், மாஜி பிரதம மந்திரி ஸ்ரீமான் கோபிநாத் பர்டோலாய் ஒரு வருஷ வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

ஸ்ரீமதி சரோஜினி தேவியின் உடம்பு நிலை சரியாயில்லாததால் எர்வாடா ஜெயிலிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். ஸ்ரீமான் டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்.

ஸ்ரீமான் சி. பி. சுப்பையாவுக்கு ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

12 "விக்டோரியா" நாணயங்களை டிரஷரியில் திரும்பப் பெற்றுக் கொள்ளும் காலத்தை நீடிக்க முடியாதென சர்க்கார் தெரிவிக்கிறார்கள். ஆனதால் 1941 செப்டம்பர் 30ந் தேதிக்கு மேல் விக்டோரியா நாணயங்கள் செல்லுபடியாகாது.

அமெரிக்காவில் பிரிட்டிஷ் ஸ்தானிகராயிருந்த லார்ட் லோதியன் திடீரென இன்று இரத்தக் கோளாறால் இறந்துவிட்டார்.

13 ஸ்ரீமான் எஸ். சத்திய மூர்த்தி இன்று ஒன்பது மாத வெறுங் காவல் தண்டனை விதிக்கப் பட்டார்.

ஐக்கிய மாகாண மாஜி மந்திரி, ரபி அகமத் கித்வாய் இன்று கைதி செய்து காவலில் வைக்கப் பட்டிருக்கிறார்.

ஹிட்லரும், வான் ரிப்பன் ட்ராப்பும் பர்லினை விட்டுச் சென்றிருக்கிறார்கள். எங்குச் செல்கிறார்களென்பது தெரியவில்லையாம்

பர்மாவில் இந்தியர் குடியேற்ற சம்பந்தமாய் விசாரிப்பதற்கு மிஸ்டர் பாரிஸ்டர் என்ற ஒருவர் சர்க்காரால் நியமிக்கப் பட்டிருப்பதால், அவருடைய யாதாஸ்து கிடைக்கும் வரை இது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் சர்க்காரால் எடுத்துக் கொள்ளப் பட மாட்டாதெனத் தெனத் தெரிவதாய் டில்லிச் செய்தி ஒன்று கூறுகிறது.

அண்ணாமலை சர்வ கலாசாலை மாணவர்களிற் சிலர் இன்று கைது செய்யப் பட்டனர். கைது செய்யு முன் குழப்பம் ஏற்பட்டதால் தடியடிப் பிரயோகம் நடந்ததாம். இதனால் முப்பது பேருக்குக் காயமாம்.

14 டாக்டர் கான்சாகிபும் மற்றும் சிலரும் இன்று சத்தியாக்கிரகம் செய்ததில் கைதியாகி உடனே விடுதலை செய்யப்பட்டனர்.

ஸ்ரீமான்களான குமாரசாமி ராஜா, "தினமணி" ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை, வீரவாகுப் பிள்ளை இவர்களுக்கு முறையே ஒன்பது மாதக் கடுங்காவலும் 300 ரூ. அபராதமும் தவறினால் மேற்கொண்டு மூன்றுமாதக் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது.

15 மான்ஷியர் லவால் கைதுசெய்யப்பட்டதாக லண்டன் செய்தி கூறுகிறது.

16 கல்கத்தா ஐரோப்பிய வியாபார சம்மேளனத்தின் வருஷாந்திரக் கூட்டம் இன்று நடைபெற்றதில் வைசிராய் பிரசங்கம்செய்தார். அப்பொழுது, இந்தியாவில் அரசியல் கட்சிகள் யாவும் ஒன்றுபட வேண்டுமென்றும், தற்போது நடைபெறும் சத்தியாக்கிரகம் வருத்தம் தரத்தக்கதென்றும் கூறினார்.

ஸ்ரீமான் கத்தே ரங்கய்ய நாயுடு கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைத்கப் பட்டிருக்கிறார்.

எல்லைப்புற மாகாணத்தில் இன்றோடு மூன்றுநாட்களாக சத்தியாக்கிரகம் நடைபெறுவதாகவும் ஆனால் ஒருவரும் கைது செய்யப்படவில்லையென்றும் பெஷாவர் செய்தி கூறுகிறது.

பண்டித மாளவியாவின் இளைய குமாரர், பண்டித கோவிந்த மாளவியா இன்று கைதுசெய்யப்பட்டார்,

18 கைது செய்யப் பட்டிருந்த மார்ஷியல் லவால் விடுதலை செய்யப் பட்டதாக நியூயார்க் செய்தி கூறுகிறது,

ஸ்ரீமான் வி. நாடி முத்துப் பிள்ளை இன்று கைது செய்யப் பட்டார்.

19 வட ஆப்பிரிக்காவில் இத்தாலியப் படைகளுக்கு விரோதமாக பிரிட்டிஷ் படைகள் வெற்றிபெற்றதைக் குறித்து மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபையில் பேசினார்.

20 இத்தாலியப் படைகள் ஆப்பிரிக்கப் போர்முனையில் பின்வாங்கின,

22 லார்ட் ஹாலிபாக்ஸ் அமெரிக்காவில் பிரிட்டிஷ் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டிருக்கிறார், அவருடைய ஸ்தானத்தில் மிஸ்டர் ஈடன் அந்நியநாட்டு மந்திரியாக நியமிக்கப்பெற்றிருக்கிறார்.

23 இத்தாலிய மகா ஜனங்களை முன்னிலைப் படுத்தி மிஸ்டர் சர்ச்சில் ரேடியோ பிரசங்க மொன்று செய்தார்.

24 யுத்தம் நின்று சமாதானம் ஏற்படும் பொருட்டு போப்பாண்டவர் ஐந்து நிபந்தனைகளைக் கூறி யிருக்கிறார்,

25 கிறிஸ்மஸ் பண்டிகைக்காக யுத்தம் நடைபெறுவது நிற்கவில்லை.

26 ஜெர்மன் துருப்புகள் இத்தலி பக்கம் போய்க் கொண்டிருக்கின்றன வென்று ஒரு செய்தி கூறுகிறது.

27 யுத்தச் செலவுக்காக என்னென்ன விதத்தில் பணம் வசூலிக்கப்படு மென்பதைப் பற்றி பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஒரு பிரசங்கம் நிகழ்த்தினார்.

சந்தா நேயர்களுக்கு!

நமது சந்தா நேயர்களிற் சிலர், நான்கைந்து மாதங்களுக்குப் பிறகு, தங்களுக்குப் பத்திரிகை கிடைக்கவில்லையென்று எழுதுகிறார்கள். இது நமக்கு மிகவும் சிரமமாயிருக்கிறது. பிரதிமாதப் பத்திரிகையும் அந்த மாத முடிவுக்குள்ளோ அல்லது அடுத்த மாதம் முதல் வாரத்திற்குள்ளோ தங்களுக்குக் கிடைக்காவிட்டால் உடனே சந்தா நேயர்கள் நமக்குத் தெரிவித்தால், அதனை உடனே கவனிப்பதற்குச் சௌகரியமாயிருக்கும். அப்படிக்கின்றி, பல மாதங்கள் கழித்து நமக்குத் தெரிவித்தால் அவற்றை நாம் கவனிக்கமுடியாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர்



ஆப்ரஹாம் லிங்கன்

அப்ரஹாம் லிங்கன்

அமெரிக்காவில் சென்ற நூற்றாண்டில், அடிமை வியாபாரம் ஒரு சட்டரீதியான தொழிலாகக் கருதப்பட்டு வந்தது. இதனை ஒழித்த பெருமை அப்ரஹாம்லிங்கனுடையது. இவன் அமெரிக்கக் குடியரசில் பதினாறாவது பிரசிடெண்டாக இருந்தவன். அமெரிக்கர்கள், இவனைத் தங்கள் தேசீய வீரர்களில் ஒருவனாகக் கருதிப் போற்றிவருகின்றனர்.

லிங்கன் 1809ம் வருஷம் பிப்ரவரி மாதம் 12ந் தேதி பிறந்தான். இவன் பெற்றோர்கள் பரம ஏழைகள். இளமையில் இவன் தாயார் இறந்துவிட்டாள். இதனால் இவனுடைய தந்தையான தாமஸ் லிங்கன் என்பவன் வேறொருத்தியை மணஞ் செய்துகொண்டான். இதனால் அப்ரஹாமுக்கு எவ்வித கல்வி வசதிகளும் கொடுக்கப்படவில்லை. ஆயினும் இவன் தன் தேகத்தினால் உழைத்து குடும்ப போஷணைக்கு உதவி வந்தான். இவன் தன்னுடைய 25வது வயதில் நியூ ஆர்லியன்ஸ் என்ற பிரதேசத்திற்குச் சென்றபோது அங்கு அடிமை வியாபாரம் நடைபெற்று வந்ததைப் பார்த்து இவன் மனம் புழுங்கினான். அப்பொழுதே இந்த வழக்கத்தை எப்படியாவது ஒழிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டான். தன் நண்பர்களிடையே இது சம்பந்தமாகப் பிரசாரம் செய்துவந்தான். இவனுக்கு ஒரு செல்வாக்கு ஏற்பட்டது. இல்லினாய் மாகாணச் சட்டசபைக்கு ஓர் அங்கத்தினனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். அந்தக் காலத்திலேயே இவன் சட்டப் பரீட்சைக்குப் படித்து அதிலும் தேர்ச்சிபெற்றான். பின்னர் இவன் அமெரிக்க செனட்டுக்கு அபேட்சகனாக நின்றான். முதலில் தோல்வி ஏற்பட்டது. மறு தேர்தலில் வெற்றி கண்டான். இதன் பின்னர் 1861ம் வருஷம் மார்ச் மாதம் 4ந் தேதி குடியரசின் பிரசிடெண்டாக நியமனம்பெற்றான். ஆனால் அடிமை வழக்கத்தை ஆதரிக்கிறவர்களுக்கும், அடிமை வழக்கத்தை எதிர்ப்பவர்களுக்கும் பெரிய சண்டை மூண்டது. இதுவே அமெரிக்க உள்நாட்டுச் சண்டை என்று பெயர். இது கடைசியில் லிங்கனுக்குச் சாதகமாகவே முடிந்தது. இதன் காரணமாக லட்சக்கணக்கான அடிமைகள் விடுதலை செய்யப்பட்டனர். அப்படி விடுதலை செய்யப்பட்டவர்கள், வயிற்றுப் பிழைப்புக்கு வழியில்லாமல் திண்டாடினார்கள். இதனால் இவர்களில் சிலர்—எந்த அடிமைகளின் விடுதலைக்கு லிங்கன் படாதபாடு பட்டானோ அந்த அடிமைகளிற் சிலர்—இவன் மீது வெறுப்புக்கொண்டார்கள். 1865ம் வருஷம் ஏப்ரல் மாதம் 14ந் தேதி, லிங்கன் ஒரு நாடகக் கொட்டகைக்குச் சென்று அங்கே நடைபெறும் நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்பொழுது ஜான் வில்கிஸ் பூத் என்ற ஒரு நடிகன் திடீரென்று லிங்கன்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொன்றுவிட்டான். இவனுடைய பரிதாபகரமான முடிவைக் கண்டு அமெரிக்கர்களிலே துக்கப்படாதார் யாருமில்லை.

—"ப்ரஹ்மசாரி"

சுவாமி விவேகானந்தர் உலகுக்களித்த நிதி

சுவாமி விவேகானந்தர்

இந்தியாவில் பிறந்த போதிலும் அவர் உலகம் முழுவதுக்கும் சொந்தமானவர். அந்த மஹாபுருஷர் காலந்தொடக்கம் பாரதநாடு புத்துயிரும் புது மலர்ச்சியும் அடைந்து வருகின்றது. அவர் கல்கத்தா நகரத்திலுள்ள ஒரு செல்வக் குடும்பத்தில் 1862ம் ஆண்டு பிறந்தார். அந்தக் காலத்தில் கிடைக்கக் கூடிய சிறந்த கல்வி முறையில் பயின்று சர்வகலாசாலைப் பட்டம் பெற்றவர். மேல்நாட்டு அறிஞருடைய தத்துவசாஸ்திர நூல்களைப் படித்ததின் பயனாக அவருடைய சமயக் கொள்கைகள் மாறுதலடைந்தன. கடவுள் பற்றொழிந்து நாஸ்திகக் கொள்கைகள் அவர் மனதைக் கவர்ந்தன. அவர் உலக சிருஷ்டியின் அந்தரங்க உண்மையை அறிய விரும்பினார். ஆனால் பல அறிஞர்களிடம் தமது சந்தேகத்தை எடுத்துக் கூறியும் அவர்களால் அதற்குத் தக்க விடையளிக்க முடியவில்லை.

இவ்விதகடவுள்விசாரம்அவருடைய மனதை வருத்திக் கொண்டிருக்கும் பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரைப் பற்றிக் கேள்விப்பட்டார். உடனே அவரிடம் விரைந்து சென்று "ஐயா, தாங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா?" என்று கனலெழக் கேட்டார். பகவான் ராமகிருஷ்ணர் அந்த வேதாந்தச் சிங்கத்தைப் பரமானந்தத்துடன் நோக்கி "ஆம், கண்டுள்ளேன்; உன்னை என் முன் காண்பதுபோலக் கடவுளைக் காண்கின்றேன். ஆனால் இன்னும் தீவிரமான உணர்வுடன் காண்கின்றேன்" என்றார். "கடவுளைக் காட்ட முடியுமா" என்பதற்குமுன், "நான் உனக்கு அவரைக் காட்ட முடியும்" என்று பதிலளித்தார். குருநாதரின் வார்த்தைகள் உண்மையும் உறுதி பயப்பனவாயுமிருந்தன. உடனே ஒரு உள்ளன்பு ஊற்றெடுத்தது; இன்பந் துளிர்த்தது. விவேகானந்தர் ஸ்ரீராம கிருஷ்ணரின் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து

"வேதமே யுருவெடுத்து விரும்பி
யாம் உய்தற்காகும்

போதமே புரிந்துவந்த புண்
ணிய லீலை செய்திப்

பூதலந்தனக்கு ஞானம் பொலி
விளக்கேந்துகின்ற

சோதியே சுத்த சக்திச்
சொரூபமே குருவே போற்றி"

என மனங்கசிந்து பாடினார்.

சுவாமி விவேகானந்தர் ஆங்கிலம், ஆரியம், சரித்திரம், சாஸ்திரம், சங்கீதம் என்னும் பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றவர். தர்க்க சாஸ்திரத்தில் நிகரற்ற புலமையுடையவர். அவருடைய பாட்டின் இனிமையில் உருகாதாரில்லை. பெயர்பெற்ற சுரேந்திர

நாத பானர்ஜியே அவருடைய பேச்சுத்திறனை வியந்து கூறியிருக்கின்றார். வேதாந்த சாஸ்திரங்களையும் மேல் நாட்டுத் தத்துவ ஞானிகளின் நூல்களையும் நிரம்பப் படித்தவர். விஷயத்தை எடுத்து உறுத்திப் பேசுவதில் இணையற்றவர். அவருடைய வீரத் திரு வடிவு எவர் மனதையும் கவரும். அவருடைய சிறந்த குணங்களையும் ஆற்றல்களையும் வியந்து ஸ்ரீராம கிருஷ்ணரே,

"தங்கை வளத் திருமுகத்தான்
அறிவொளிரும்
கண்ணுடையான் என்
கண்ணனன்றன்
சங்கரனி னருளீன்ற தவப்
புதல்வன்;
சகல கலைவாணன்; ஞானத்
துங்கமணி; நல்லன்பர் சங்கமணி;
வங்கமணி; சுடர் வேதாந்தச்
சிங்கமணி; யென்னருமைத்
தங்கமணிச் செல்வன்........"

எனக் கூறியுள்ளார்.

தெய்வீக இலட்சணங்களெல்லாம் விவேகானந்தரிடம் அமைந்திருந்தபடியால் ஸ்ரீராம கிருஷ்ணர் அவரைத் தமது பிரதம சீடனாக்கித் தம் எதிர்கால அருட்பணி செய்வதற்கு வேண்டிய பயிற்சியும் அளித்தார்.

தமது குருநாதர் மஹாசமாதியடைந்ததின் பின்னர், சுவாமிகள் இமய மலையிலிருந்து குமரி முனைவரை பாதசாரியாகச் சுற்றுப் பிரயாணஞ் செய்தார். அப்பொழுது வறியோர், செல்வர், அரசர், தீண்டாச் சாதியார் என்னும் பல திறப்பட்ட மனிதருடன் கலந்து கொள்வதற்குச் சந்தர்ப்பங் கிடைத்தது. அதன் பயனாக இந்திய மக்களைப் பீடித்திருக்கும் தீண்டாமை அறியாமை, சாதிமத வித்தியாசம், மூடக் கொள்கைகள், மேனாட்டு நாகரிக மோகம் என்னுஞ் சமுதாய ஊழல்களைக் கண்ணாரக் கண்டார். இந்தியத் தாயின் புராதனச் சிறப்பையுந் தற்கால ஈனதசையையும் ஒப்பிட்டுப் பார்த்து மனம் வருந்தினார். இந்தியாவுக்கும் உலகுக்கும் உய்யும் வழியென்ன வென்பதைச் சிந்தித்து கன்னியாகுமரி யன்னையின் முன்னிலையில் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்தார். உள்ளத்தில் ஒருவழி தோன்றியது தனது குருநாதரின் அருட்பணியென்ன வென்பதும் அப்பொழுது தான் அவருக்குத் தெளிவாயிற்று. இந்தியநாடு தனது ஆத்ம ஞானத்தை ஏனைய உலகத்தாருக்குப் புகட்ட வேண்டும். மேல்நாட்டாரிடமிருந்து இந்தியர் திரவியந் தேடும் முறைகளைக் கற்றுக் கொள்ள வேண்டும். இந்தியக் கலையும் மேனாட்டுக் கலையும் இரண்டறக் கலப்பதற்கு ஒரு ஒற்றுமைப் பலத்தை ஏற்படுத்தல் வேண்டும். அதன் வழியாக இந்திய ஆத்மஞானம் மேல்நாட்டுக்கும், மேனாட்டுப் பொருள் அபிவிருத்தி முறைகள் இந்திய நாட்டுக்கும் சதா போய்க் கொண்டிருக்க வேண்டும். பாரத தர்மம் பாரெலாம் விளங்க வேதாந்த முழக்கஞ் செய்ய வேண்டும். ஆண்டவன் ஆருயிர்; ஆகையால் ஆருயிர்ப் பணியே ஆண்டவன் பணியாம். இவற்றைச் செய்து முடிப்பதே தனது கடமையெனத் தெளிந்து கொண்

டார். இதைக்குறித்து கவி சுத்தானந்த பாரதியாரும் பின் வருமாறு அழகாகக் கூறுகின்றார்:—

"ஓரின்பங்காணுமல் மிடியிருளில்
உடல் சுமக்கும் உயிர்களுய்ந்து
பாரின்பஞ் சீரோங்கப் பணிசெய்த
லென்பணி யென்றறிந்து
கொண்டேன்
நேரின் பத்தெய்வத்தை
நிலவுவித்தேன்
கடவுளென நிலவி யென்னைப்
பேரின்பத்தால் வளர்த்த
பெரியகுரு
நாதனருட்டுணையே போற்றி!

பணியாளும் நினைப்பாலுந்
தவத்தாலும்
பருகிய நன் மொழிகளாலும்
துணிவான துறவாலும் அறிவாலும்
தூய குருதுணையினுலும்
தணியாத தழலா யென்னுளத்
தெரியும்
தாயன்புத் தொண்டு செய்தற்
கனிந்தேனிப் பிறவியினை ஆத்ம
சக்தி
வீரத்தால் ஆற்றுகின்றேன்!

இப்படி குருதேவரது அருட்பணியை எவ்விதம் நிறைவேற்றலாமென ஆவலோடிருந்தார்.

சுவாமிகள் மைசூர், மதராஸ் என்னும் நகரங்களில் சுற்றுப் பிரயாணஞ் செய்யும் பொழுது அவருடைய வாக்குச் சாதுரியமும், புருஷ லட்சணமும் அறிஞரின் மனதைக் கவர்ந்தன. அவர்கள் 1893ம் ஆண்டு அமெரிக்க நாட்டில் நடந்த சர்வ மத மஹா சபைக்கு அவரை இந்து சமயப்பிரதிநிதியாக அனுப்புவதற்கு வேண்டிய பொருளுதவி செய்தனர். அமெரிக்காவில் தெய்வாதீனமாக ஒரு பெரியாரின் உதவியைக்கொண்டு சர்வ மத மஹாசபையில் பேசுவதற்கு இடம் பெற்றார். அப்பெரியார் சுவாமிகளை சங்க அக்கிராசனருக்கு அறிமுகப் படுத்தும்பொழுது "நமது புலமை நிரம்பிய போதகாசிரியர் களெல்லாருடைய அறிவைப் பார்க்கிலும் பாண்டித்தியம் பெற்றவர் இவர்" என்று சிறப்பாகக் கூறியுள்ளார். அந்த மஹா சபையில் சொற்பொழி வாற்றிய பெரியரெல்லாம் தத்தம் சமயக் கொள்கைகளையும் அவர்களுடைய மதஸ்தாபகர்களைப் பற்றியுமே பேசினார்கள். ஆனல் நமது வேதாந்தச் சிங்கமோ தமது குருநாதரைப் பற்றியோ, அல்லது ஏனைய இந்து சமயாசாரியரைப் பற்றியோ, அல்லது இந்து மதத்தில் கூறப்பட்டுள்ள ஏதாவதொரு அவதார புருஷரின் கொள்கைகளைமட்டுமோ எடுத்துப்பேசினாரில்லை. அவர் அப்படிப் பேசியிருப்பாராயின் அவரைப் பெரிய உலக புருஷராக அந்த மஹாசபை மதித்திராது. அவர் பேச எழுந்தவுடன் அவர் நாவிலிருந்து வந்த "அமெரிக்க சகோதரிகளே! சகோதரர்களே!" என்னும் அன்பு ததும்பும் அமிர்த மொழிகளே அமெரிக்க மக்களின் மனதைக் கவர்ந்தன. சபையோ ரனைவரும் "பேஷ்; பேஷ்! வேறொருவரும் இப்படி உலகை ஒரு குலமாக மதித்துச் சமரஸம் ததும்பப் பேசவில்லையே" என்று

நெடுநேரம் கரகோஷஞ் செய்தனர். அவருடைய சொற்பொழிவில், பழமையாகிய வேதம், உபநிடதம் என்னும் நூல்களிலுள்ள சர்வ மத சம்மதமான கொள்கைகளையே எடுத்துக் கூறினார். ஆகையினாலேதான் அமெரிக்க மக்கள் சுவாமிகளைத் தங்களி லொருவர் போலக் கருதி அவருக்கு ராஜோபசாரம் அளித்தனர். சர்வ மத மஹாசபை முடிந்ததும் பத்திரிகைகளெல்லாம் "மஹாசபை அங்கத்தவர்களுள் விவேகானந்தரே மிகச் சிறந்த சொற்பொழிவாளர்" என்றும் "சுவாமி விவேகானந்தர் பிறந்த நாட்டுக்கு நாம் கிறிஸ்துமத பாதிரிமாரை யனுப்புவது எவ்வளவு பிரயோஜனமற்ற காரியம்" என்றுங் கட்டுரைகள் எழுதின. மேனாட்டில் சுவாமிகள் பெற்ற சித்தியானது இந்திய மக்களுக்குப் புதிய உற்சாகத்தை யூட்டியது. அவருடைய அருமையும் பெருமையும் அவர்களுக்கு அப்பொழுதுதான் நன்கு தெரியவந்தது. அடிமைத்தனத்தில் ஆழ்ந்து கிடந்த பாரத மக்கள், ஆத்மஞான விஷயத்தில் தங்களுக் கொப்பாரும் மிக்காரு மில்லை யென்பதை உணர்ந்து பெருமை யடைந்தனர்.

சுவாமி விவேகாநந்தர் ஒரு பெரிய தேசபக்தன்; ஆனால் அவருடைய தேசாபிமானம் இந்தியாவோடு மட்டும் நின்றுவிட வில்லை. தேசாபிமானம் என்னவென்பதையும் தேசாபிமானிகளுக்கு வேண்டிய சிறந்த குணங்களையும் சுவாமிகள் வெகு அழகாக எடுத்துக்கூறியுள்ளார்.

"செயற்கருஞ் செயல்களைச் செய்வதற்கு மூன்று காரியங்கள் அவசியந் தேவை. உணருங்கள்! எதிர் காலத் தேசாபிமானிகளே! முதல் நெஞ்சினால் உணருங்கள்! முப்பதுகோடி தேவர், ரிஷிகளின் சந்ததிகள் இன்றுள்ள இழிந்த நிலைமையை உணருங்கள். கோடானு கோடி ஜனங்கள் பசி பசி என்றலறுவதை உணர்ந்தீர்களா? நாட்டைக் கவர்ந்த மடமை யிருளை யுணர்ந்தீர்களா? ஏழைகளின் துயர் கண்டு உங்கள் மனங் கசிந்ததா? அது உங்களுக்கு மனக் கிலேசத்தை உண்டாக்கியதா? அந்த எண்ணமானது உதிரத்துடன் சேர்ந்து, நரம்பின் வழி பாய்ந்து இருதய நாடியடிப்பது போல் சதாகாலமும் மனதில் தோன்றிக் கொண்டிருக்கிறதா? அது உங்களைப் பயித்தியக்காரர் ஆக்கிவிட்டதா? ஏழைகளின் துயர் கண்டு, உங்கள் பெயர், புகழ், பெண்டிர், மக்கள், பொருள் என்பனவற்றை யெல்லாம் மறந்தீர்களா? அப்படிச் செய்தீர்களாயின், அதுவே தேசாபிமானியாவதற்கு முதல்படி. வீண் வார்த்தை பேசுவதில் காலத்தைச் செலவிடாது பள்ளத்தில் வீழ்ந்து கிடக்கும் பிணங்களைக் கரையேற்றுவதற்கு ஏதாவது வழிவகைகளைக் கண்டு பிடித்தீர்களா? மலை போன்று விக்கினங்கள் வரினும் அவற்றைக் கண்டு மலையா திருக்கும் மனோதிடம் உங்களிட முண்டா? உலக முழுவதும் ஆயுத பாணியாய் எதிர்த்து நிற்பினும் நீங்கள் சரி என்று கருதுவதை அஞ்சாது துணிந்து செய்வீர்களா? இம்மூன்று காரியங்களும் உங்களிட மிருப்பின், நீங்கள் ஒவ்வொருவரும் அற்புதங்களைச் செய்வீர்கள்."

இந்தியா முன்னேற்ற மடைந்தால் இந்தியக்கலைகளும், ஆத்மஞானமும் அபிவிருத்தி யடையும். அப்பொழுது தான் மேனாடுகள் தங்களுக்கு இன்றியா மையாது வேண்டப்படும் ஆத்ம ஞானத்தை இந்தியாவிட மிருந்து பெறமுடியும். "மிகப் புராதனகாலந் தொடக்கம் எல்லாச்சமய ஆசாரியர் களும் இந்த நாட்டிலிருந்தே ஆத்ம ஞான வெள்ளத்தை உல கெங்கும் பாய்ச்சிச் செழிக்கச் செய்தனர். இங்கிருந்தே தத்துவ சாஸ்திர நூல் கள் தோன்றி எத்திசையுஞ் சென்று உலகம் முழுவதையும் கவர்ந்து இனி மேலும் இப் புண்ணிய நாட்டில் பொங்கி யெழும் ஆத்ம வெள்ளமே உலகில் புத்துயிர் செழிக்கப் பாய்ந்து உலகாயத நாகரிகத்தை மாற்ற வேண்டும்..........இந்தியாவிலிருந்து உலகம் முழுவதுஞ் சென்று பாரத நாட்டின் வேதாந்தச் செல்வத்தை வழங்கக் கூடிய அஞ்சா வுறுதியுள்ள ஆத்ம தீரர் கள் பிறக்குங் காலத்தை எதிர் பார்த்த வண்ணமாயிருக்கிறேன்" என்று சுவாமி விவேகானந்தரே கூறி யிருக்கின்றார்.

வறுமைப் பிணியால் வருந்தும் இந்திய மக்களின் நிலைமை மிகவும் பரிதாபகரமாயிருந்தது. சுவாமிகள் அமெரிக்க நாட்டிலிருந்த பொழுது, இந்தியரின் வறுமையையும் மேனாட் டாரின் டாம்பீக வாழ்வையும் ஒத்துப் பார்த்து உதிரக் கண்ணீர் சிந்தினார். பேலூர் மடத்தில் தரித்திர நாராயண சேவையைத் தொடங்கிய போது, "ஏழைகளுக்கு அன்னதானம் அளிப்பதற்குச் சமைத்த அரிசிக் கஞ்சியானது இந்தக் கங்கைப் பிரவாகம் போல ஓடுவதைப் பார்த்து நான் மன மகிழ வேண்டும்" என்று கூறி யுள்ளார். ஆனால் அன்னதானச் சத்திரங்கள் அமைத்து விட்டால் இந்தியாவின் வறுமை யகன்று விடு மென்று சுவாமிகள் கருதவில்லை. அதற்கு நேர்மாறாகக் குபேரனாலும் இந்திய மக்களுக்கு எக்காலமும் உண வளிக்க முடியா தென்பது அவர் அபிப்பிராயமாகும். ஏழைகள் ஏதாவது தொழில்களின் மூலம் தம் சொந்த முயற்சியால் தமக்கு வேண்டிய பொருள்களைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் தான் கால மன்னியில் வறுமைப் பிணி இந்தியாவை விட்டு நீங்கும். மேல் நாட்டுச் சாஸ்திரங்களைக் கற்று, அவற்றைக் கைத்தொழில், கமத் தொழில் அபிவிருத்திக்குப் பிரயோ சனப் படுத்துதல் வேண்டும். ஐரோப் பியரிட மிருந்து அவர்களுடைய தொழில் ஆற்றுஞ் சக்தியை இந்தியர் கற்றுக்கொள்ள வேண்டும். அவர் களிடத்துக் காணப்படும் உற்சாகம், சுயேச்சை விருப்பு, திறமை, தேசிய, சமுதாய காரியங்களில் ஒத்துழைப்பு, ஒருமைப்பாடு என்னும் அரும் பெருங் குணங்கள் இந்தியருக்கு அவசியந் தேவை. பழைய காலத்துப் பெருமையில் அளவுக்கு மிஞ்சிப் பேசுவதைக் கொஞ்சம் நிறுத்திக் கொண்டு, நிகழ்கால, எதிர்காலப் பெருமையை நிறுவுவதற்கு இயன்ற முயற்சியைச் சலியாது செய்தல் வேண்டும்.

'கல்வி! கல்வி! கல்வி! கல்வி யென்னும் மந்திரச் சொல்லினால் தவிர்க்க முடியாத குறைகள் ஒன்றுமில்லை' என்று சுவாமிகள் கூறுவது வழக்கம். மக்களின் பொருளாதார நிலைமையைச் சீர்படுத்தவும், அவர்களின்

மூடப் பழக்க வழக்கங்களை வேரோடறுக்கவும், புராதனப் பெருமையில் ஜனங்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தவும், தேசிய சமுதாய இயக்கங்களில் மக்களை ஊக்கப்படுத்தி அவர்களிடையே ஒருமைப்பாட்டை ஸ்தாபிக்கவும் தேசியக் கல்வியே சிறந்த கருவியென்பதைச் சுவாமிகள் உணர்ந்தார். ஆனால் அந்தக் காலத்துக் கல்வி முறை அவருக்குக் கொஞ்சமேனும் திருப்தியளிக்கவில்லை. 'கல்வியென்பது மனிதனுக்குள்ளிருக்கும் பூரணத் தன்மையின் வெளித்தோற்றம். குரு செய்யவேண்டிய ஒரே ஒரு காரியமென்னவென்றால் வழியிலிருக்கும் தடங்கல்களையெல்லாம் நீக்குவதேயாம். மக்களின் வாழ்க்கைப் போரைச் செவ்வனே நடத்துவதற்குப் பயன்படாத கல்வியால் பிரயோஜனமில்லை. மனிதத் தன்மையை விளைவிக்கும் கல்வியே நமக்கு வேண்டும். பண்டைக் காலக் குரு குலங்கள் போன்ற கல்வி ஸ்தாபனங்கள் தேவை. அவற்றில் மேனாட்டு விஞ்ஞான சாஸ்திரத்துடன் வேதாந்தமும் கற்பிக்கப்படவேண்டும். சுடர்விட்டெரியும் தீயையொத்த தூய ஒழுக்கமுடைய ஆசிரியனோடு ஒருவன்குழந்தைப் பருவத்திலிருந்து வசித்தல்வேண்டும். உயரிய கல்விப் பயிற்சிக்குஉயிருள்ள ஓர்உதாரணமாக அவ்வாசிரியன் இருத்தல் வேண்டும்' என்பது சுவாமிகளின் தேசியக் கல்வியின் இலட்சியமாகும்.

பெண் கல்வி விஷயமாகவும் சுவாமிகள் அரிய தொண்டாற்றியுள்ளார். இந்தியப் பெண்மணிகளுக்குகந்த கல்வி முறையை ஏற்படுத்தி அதன் மூலம் அவர்களை அடிமைத் தனத்திலிருந்து நீக்க விரும்பினர். பெண்கள் ஆண்களைப் பார்க்கிலும் புத்தி கூர்மையில் குறைந்தவரல்லர். அவர்களுக்குத் தகுந்த பயிற்சி யளித்தால் அவர்கள் குடும்ப சம்பந்தமான பொறுப்புக்களை மட்டுமன்றி தேசிய சமுதாயத் தொண்டுகளிலும் பங்கு பற்றுவர். பெண் கல்வியானது தன்னம்பிக்கை, கற்பு, மரியாதை, தேசாபிமானம் என்னும் அரும் பெருங் குணங்களை ஸ்திரப் படுத்தக் கூடியதாயிருக்க வேண்டும். "தற்கால நிலைமையை நோக்கும்போது, நமது பெண் மணிகளைத் துறவு வாழ்க்கைக்குப் பயிற்றுதல் வேண்டும். அவர்கள் தங்கள் மாசற்ற கற்பின் திறனால் வாழ்நாள் முழுவதும் கன்னியா விரதம் பூணல் வேண்டும். இந்தப் பயிற்சியுடன், அவர்களுக்கும் பிறருக்கும் பயன் தரக்கூடிய மேல்நாட்டுச் சாஸ்திரங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இந்திய மாதர் சீதா தேவியைப்போன்ற பெண்மணிகளாக விளங்க வேண்டும்........ சங்கமித்ரா, லீலா, அஹல்யாபாய், மீராபாய் போன்ற வீரத் தாய்மார்களை இந்தியாவின் தேவைக்கு நாம் பயிற்றியெடுக்க வேண்டும். அன்பு, பக்தி, வீரம், தூய்மைபலம் என்னும் அரும் பெரும் குணங்கள் ஒருங்கே பொருந்திய பெண்கள் தேவை". அப்படிப்பட்ட நற்குண முடைய பெண்மணிகளைக் கல்விப் பயிற்சியின் மூலம் பெறலாமாயின் நாம் ஒவ்வொரு வீட்டையும் சாந்தி நிறைந்த சந்தோஷ நிலையமாக மாற்றி விடலாம். அத்துடன் நமது பாரத நாடும் புத்துயிர் பெற்ற சத்திய யுகத்தையடையும்.

இந்திய சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாயிருந்த காரணங்

களில் தீண்டாமை முக்கியமானதாகும். அது பல்லாண்டுகளாக கோடிக் கணக்கான மக்களை உய்யும் வழி தெரியாது தவிக்கச் செய்தது. உயர்ந்த சாதியார் தாழ்ந்த சாதியாரை அடிமைகளைப்போல் பாவித்தனர். இதைக்கண்டு மனம் வருந்திய சுவாமிகள் "ஐயோ! இந்நாட்டு ஏழைகளைப்பற்றிச் சிந்திப்பார் ஒருவரு மில்லையே! அவர்களே நமது நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள். அவர்களின் இடையறு முயற்சியினாலேதான் உயர்ந்த சாதியார் உல்லாச வாழ்வு வாழ்கின்றனர். பட்டணத்தில் வேலை செய்யும் சக்கிலியர்கள் ஒருநாள் தங்கள் வேலையை நிறுத்தினால் பட்டணத்தில் பெருந்திகில் ஏற்படும்...........இந்துக்கள் தாழ்ந்த வகுப்பினருக்கு அநுதாபங் காட்டாத படியால் மதராஸில் பல்லாயிரம் பறையர்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவுகின்றனர். ஏழைப் பறையன் உயர்குலப் பிராமணன் போகுந் தெருவில் போகக் கூடாது. ஆனால் அப் பறையன் கிறிஸ்தவனாகி ஒரு ஆங்கிலப் பெயர் புனைந்து விட்டால் எல்லாஞ் சரியாய்ப் போய்விடுகிறது. இவ்வித கொடுமையான வழக்க மிருப்பது எவ்வளவு வெட்கக்கேடான காரியம்" எனக் கூறினார். முன்னே கூறியபடி தீண்டாமையை ஒழிப்பதற்குக் கல்வி யபிவிருத்தியே சிறந்த சாதன மாகும். பரோபகார சிந்தையுள்ள தேசாபிமானிகள் கூட்டங் கூட்டமாகக் கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள ஜனங்களுக்கு படக்காட்சிகளின் மூலம் சரித்திரம், பூமிசாஸ்திரம், மேல்நாட்டுச்சரித்திரங்கள் முதலியவற்றை விளங்கப் படுத்துதல் வேண்டும்.

வர்ணாச்ரம முறையானது ஒருகாலத்தில் மிகவும் பிரயோசனமா யிருந்தது. சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக மக்கள் செய்யவேண்டிய பணிகள் பலவும் பற்பல வகுப்பினருக்குப் பிரித்துக் கொடுக்கப் பட்டிருந்தன. அந்தக் காலத்து ஏற்பாட்டின்படி உயர்வு தாழ்வு என்ற வித்தியாச மிருக்கவில்லை. ஒவ்வொரு சாதியாரும் தத்தம் தொழிலைச் செவ்வனே செய்து நாட்டின் வளத்தைப் பெருக்கினர். பிராமணன் தேசத்துக்கு எவ்வளவு இன்றியமையாது வேண்டப் படுகின்றானோ, அவ்வளவுக்குச் சூத்திரனுந் தேவைப் படுகின்றான். சூத்திரன் உழவுத் தொழில்செய்து தானியஞ் சேமிக்காவிடின் பிராமணன் பட்டினி கிடக்க வேண்டியதுதான். அதே போனறு ஒரு வர்ணத்தவன் மற்றொரு சாதியாரின் உதவியையும், ஒத்தாசையையும் வேண்டி நிற்கின்றான். ஆனால் ஒரு காலத்தில் மிகவும் பிரயோசனமா யிருந்த வர்ணாசிரம முறை தற்காலத்தில் மிகவுஞ் சீர்கெட்ட நிலைமையை அடைந்து விட்டது. பிராமணர், பிராமண ரல்லாதாரை இம்சித்து நடத்தத் தொடங்கி விட்டனர். இந்தச் சீர்கெட்ட நிலைமையை எவ்வாறு சீர் திருத்தலாமென்று யோசித்துப் பார்த்த பொழுது சுவாமிகளுக்கு ஒருவழி தோன்றிற்று. "உயர்ந்த சாதியாரைத் தம் அந்தஸ்தி லிருந்து குறைப்பதைப் பார்க்கினும், தாழ்ந்த சாதியாரை உயர்த்துவதே சிறந்தது; தற்சமயம் சண்டாளன் வாழ்க்கையின் கீழ்ப்படியிலும், பிராமணன் மேற்படியிலும் இருக்கின்றனர்: கீழ்ப்படியிலுள்ள சண்டாளனை மேற்படிக்கு உயர்த்துவதற்கு முயற்சி

செய்வதே நமது கடமை. சாதி வித்தியாசத்தை ஒழிப்பதற்கு இதுவே தகுந்த முறை" என்று சுவாமிகள் கூறியிருக்கின்றார்.

மேல்நாட்டுக் கல்வி பயின்ற தேசாபிமானிகள் இந்தியா ஈனநிலையெய்தற்குச் சமயமே அடிப்படையான காரணம் என்று அபிப்பிராயப்பட்டனர். சுவாமி விவேகாநந்தர் இவர்களின் தப்பபிப்பிராயத்தைப் பலமுறை கண்டித்திருக்கிறார். "நமது புண்ணியபூமி ஞானபூமி; தூய துறவிகள் நிலம்; நான் மேனாடுகளைச் சுற்றிப் பல்வகையினரின் பழக்க வழக்கங்களைக் கவனித்தேன். எங்கும் அரசியல் விவகாரமும், ராணுவப் பெருக்கமும், யந்திர விநோதங்களுமா யிருக்கின்றன. இந்தியாவிலேயே அத்யாத்மஞானம் அனைத்திற்கும் அடிப்படையா யிருக்கின்றது. ஆத்மசக்தியின் ஆற்றல் அபாரமானது. அதுவே இந்தியாவின் முதுகெலும்பு. ஆத்மாவை மறந்து மேனாட்டு நாகரிக மினுக்குகளுக்கு அடிமைப் பட்டால் அன்று அழிவு நம்மைத் தொடரும்". நமது நாட்டில் சமயத்தை அடிப்படையாகக் கொண்டே சீர்திருத்தம் மேலோங்க வேண்டும்.

இந்து தர்மத்தில் பல மூடக் கொள்கைகள் காலாந்தரத்தில் புகுந்து விட்டன என்பதைச் சுவாமிகள் நன்கறிந்தார். இவற்றை நீக்கி இந்து தர்மத்தைப் புனித மாக்குவதற்கு, எம்மதத்துக்கும் சம்மதமாகிய வேதாந்தக் கொள்கைகளே சிறந்ததென வற்புறுத்திக் கூறினார். இந்து தர்மம் ஒரு சலனமற்ற வாவிபோ லிராது, ஒரு பெரிய நதிப் பிரவாகம் போல ஓடிக்கொண்டிருக்க வேண்டுமென்பது சுவாமிகள் விருப்பம். அது ஏனைய மதங்களையுந் தன்னகத்தே அடக்கக் கூடிய ஆற்றல் உள்ளது. இந்தியாவில் பிறந்த புத்த மதம் இப்பொழுது என்ன வாயிற்று என்று பலர் கேட்கலாம். அதை இந்து தர்மம் தனக்குச் சொந்த மாக்கிக் கொண்டதென்று பதிலளிக்க வேண்டி யிருக்கிறது. இந்து தர்மத்தில் ஆர்வ மிருந்த போதிலும் சுவாமிகளுக்கு ஏனைய மதங்கள் மீதுள்ள அன்பு சற்றுங் குறையவில்லை. வேற்றுமையில் ஒற்றுமை என்னுங் கொள்கையில் திடமான நம்பிக்கை அவருக்குண்டு. "ஒரு பொருள் பலவித முரண்பாடான தோற்றங்களுக் கிடங்கொடுக்கலாம். ஆனால் எல்லாத் தோற்றங்களும் ஒரு பொருளைப் பற்றியனவேயாம். இந்தக் கோயிலின் புகைப்படத்தை நாலு திசைகளிலிருந்து எடுத்துப் பாருங்கள். ஒவ்வொரு படமும் வெவ்வேறு தோற்றத்தையே காண்பிக்கின்றது. ஆனால் எல்லாப்படங்களும் அந்தக் கோயிலின் படங்களேயாம்". அதேபோன்று பல மதத்தினரும் ஆண்டவனைப் பற்றிய பலவித அபிப்பிராய முடையவரா யிருக்கின்றனர். ஆனால் எல்லா அபிப்பிராயமும் ஆண்டவ னொருவனைப் பற்றியதேயாம். பல மதத்தின் தேவையையும், அவை எல்லாவற்றிலும் உண்மை யுண்டென்பதையும் சுவாமிகள் தமது ஆத்மீக அநுபவத்தினால் உணர்ந்தார். ஆகையினாலேதான் "இந்துக்களாகிய நாங்கள் பிறமதங்களைவெறுத் தொதுக்காம லிருப்பது மாத்திரமல்ல, எல்லா மதத்தின ரோடும் ஒன்று கூடும்

இயல்புடையோம். மகமதிய மசூதியில் வழிபடுவோம்; சோராஸ்திரியருடைய நெருப்பினை வணங்குவோம்; கிரிஸ்தவரது சிலுவையின் முன்னிலையிலே முழந்தாட் படியிடுவோம். ஆகக் குறைந்த மூடக் கொள்கை முதல் அதியுயர்ந்த ஞானமார்க்கம் வரையும் உள்ள எல்லாச் சமயங்களும் அகண்டத்தினைப் பற்றி யறிந்து கொள்வதற்கு மானிட வுயிர்களாற் கைக்கொள்ளப்பட்ட பல திறப் பட்ட முயற்சிகளேயாம். ஆதலினாலே பல்வேறு சமயங்களாகிய மலர்களை யெல்லாம் ஒன்று கூட்டி அன்பென்னும் நாரினாற் ஆண்டவனுடைய வழிபாட்டிற் கிசைந்த அதியற்புத மாலையாக்குவோம்.......எவனாவது பிறர் மதமழித்துத் தனதே வாழக் கருதுவானாயின் அவனைக்குறித்து மனதார இரங்கி, எத்தனை எதிர்ப்பு வரினும், அதிசீக்கிரம் உலகிலுள்ள ஒவ்வொரு சமயக் கொடியிலும் போரல்ல; உதவியே! அழிப்பல்ல; அணைப்பே! விரோதமல்ல; சாந்தமும் சமரஸமும் என்று எழுதித் திகழ்வதைக்காண்பிப்பேன்" என வீரக்கர்ச்சனை செய்துள்ளார்.

நாகரிக உலகம் சிறப்படைவதற்கும், மேனாட்டுக் கலைகளும் கீழ்நாட்டுக் கலைகளும் இரண்டறக் கலக்க வேண்டுமென்பது சுவாமிகள் அபிப்பிராயமாகும். கிணற்றுத் தவளை போல் இந்தியர் ஏனைய நாட்டினரோடு கூட்டுற வில்லாம விருப்பதைப் பலமாகக் கண்டித்தார். "மேனாட்டு நாகரிகத்தின் சிறந்த அம்சங்களைப் பெற்று நம்மதாக்கிக் கொண்டு தேவையற்ற அம்சங்களை விஷமெனக் கருதி ஒதுக்கிவிட வேண்டும். நமக்கு மேனாட்டாரின் தொழில் செய்யும் திறமை அவசியம் தேவை; அவர்களுக்கு நமது ஆத்மஞானம் இன்றியமையாதது. இதைக் குறித்துச் சுவாமிகள் இப்புண்ணிய நாட்டில் பொங்கியெழும் ஆத்மஞான வெள்ளமே உலகில் புத்துயிர் செழிக்கப் பாய்ந்து மேனாட்டின் உலகாயதத்தை மாற்ற வேண்டும். ஆத்மஞானத்தைத் தாராளமாக வழங்குதலே ஈகை. நமது புண்ணியபூமி ஞானபூமி, அத்யாத்ம தீரர்களின் பூமி; தூய துறவிகள் நிலம். ஆத்ம சக்தியின் ஆற்றல் அபாரமானது. உலகம் இப்போது இந்தியாவின் முகம் பார்த்து ஆத்மஞான உணவை யிரந்து நிற்கிறது. சாதி சமய வேறுபாடின்றி ஆத்மச் செல்வத்தை அனைவருக்கும் பொதுவாக்க வேண்டும். வேதாந்த ஞானம் எங்கும் பாவவேண்டும்" என்று வீரமொழிகள் கூறியுள்ளார்.

சுவாமிகள் செய்த அரும்பெரும் பணிகளில் சாது சங்கத்தின் சீர்திருத்தம் மிகவும் போற்றத் தக்கது. புத்த பகவான் காலத்தில், அக்கிரமங்களில் வசித்த துறவிகள்தான் ஆத்ம ஞானத்தையும், லௌகிகக் கல்வியையும் அழிந்து போகாதவண்ணம் பாதுகாத்து வந்தனர். அதே போன்று ஐரோப்பிய நாட்டிலும் 16ம் 17ம் நூற்றாண்டுகளில் வசித்த துறவிகள், கல்வியாகிய விளக்கை அஞ்ஞானமாகிய அந்தகாரம் நிறைந்த நாட்டில் தூண்டிக் கொண்டிருந்தனர். ஆனால் அக்காலத் துறவிகளெல்லாம் தத்தம் விமோசனத்துக்காகவே முயன்று வந்தனர். சுவாமிகள் இவ்வித சுயநலத்துறவை விரும்பவில்லை. துறவியின் வாழ்வானது உலகத்தோடு சம்பந்தப் பட்டதாம். மக்கள் அனைவருக்

கும் பயன் தருவனவா யிருக்கவேண்டுமென்பது சுவாமிகளின் நோக்கம். இந்த நோக்கத்துக்கு இலக்கணமாகவே இராமகிருஷ்ண சங்கத்தை அமைத்தார். மனிதர் தீரமுள்ள மனிதராகவேண்டும். ஆத்மஞானமும், ஆத்மானுபவமும் விளங்கும் நூறு மனிதரிருப்பின் உலகையே மாற்றி வைக்கலாம்! அஞ்சா வுறுதியுள்ள அத்யாத்ம தீரர்கள் பாரதநாட்டின் வேதாந்தச் செல்வத்தை உலகெங்கும் வழங்க வேண்டும். அத்தகைய தீரர்களை, தியாகிகளை, அறிவொளி நிறைந்த ஆத்ம வீரர்களைப் பயிற்றுவதே எனது முதல் வேலை. வேண்டுவது ஆற்றல், அந்த ஆற்றல் ஆன்மாவிலுள்ளது; உங்களிடமே உள்ளது. உறுதி கொள்ளுங்கள். நமக்கு இரும்புத் தசைகளும் உருக்கு நரம்புகளும் வேண்டும். மனிதனைத் தீரராக்கும் மதமே நமக்கு வேண்டும்; மனிதத்தன்மை விளக்குங் கல்வியே வேண்டும். உங்கள் மனம் உடல் அல்லது உயிரைத் தளர்த்தும் எதையும் நஞ்சென விலக்குங்கள். உறுதி பயப்பதே உண்மை. உண்மையென்பது ஒளியும் உறுதியுந் தருவதே; தளர்வை யொதுக்கித் தள்ளுங்கள். உபநிடத உண்மை உங்கள் முன்னுள்ளது. வேதாந்தச் சிங்கங்களாக விளங்குங்கள். அச்ச மொழியுங்கள்" என்று தமது சீடருக்கு வீரமொழிகள் கூறியுள்ளார்.

சில காலண்டர் விநோதங்கள்

பிரதி வருஷமும் அக்டோபர் மாதம் முதல்தேதி எந்தக் கிழமை வருகிறதோ அதே கிழமையில் தான் ஜனவரி முதல் தேதியும், ஏப்ரல் முதல் தேதி எந்தக் கிழமையோ அதே கிழமையில்தான் ஜூலை முதல் தேதியும், டிசம்பர் முதல் தேதி எந்தக் கிழமை வருகிறதோ அதே கிழமைதான் செப்டம்பர் முதல் தேதியும் வரும். பிப்ரவரி, மார்ச், நவம்பர் ஆகிய மூன்று மாதங்களின் முதல்தேதி ஓரே கிழமையில்தான் வரும். இந்த நியமங்கள் லீப் வருஷங்களுக்கு ஏற்காது.

—"தேவிதாஸன்"

தமயனின் கடிதம்-15

வீறுகொள்

சுற்றியே நின்னரும் சொந்தநன் னாட்டினைச்
    சூழ்ந்து பரிவிட் டிறங்கினர் பகைவர்
பற்றிலா துன்னருந் தாய்மனம் பதறிப்
    பாய்ச்சிடுங் குரல்நின் காதிற் படிந்ததோ?
பற்றி யெரிந்திடு தழலிடைப் பட்டும்
    பருத்த மூச்செறிந் துறங்கிடும் பாம்பென
சற்றும் உணர்வற்றுக் கிடந்திட லாமோ?
    சடுதியிற் படுக்கைவிட் டெழுந்துநில் தம்பீ!

கெட்டநின் சோம்பற் படுக்கையைச் சுற்றி
    எட்டவே வீசிவிட் டேறுமுன் னேறு!
கொட்டிடு நின்னிரு தோள்கள் பூரிக்க
    கூட்டிடு மக்களை விண்சுடர் போலே!
கட்டிடு வீறுடன் கச்சை நற்கையில்
    காந்தியின் சத்தியப் போரணி யேந்து;
முட்டிடு நின்பகைத் தலையெலாம் வீழ
    முழங்கிடு வெற்றிச் சங்கு விண்ணதிர!

உற்றுப்பார் உலகில் ஒவ்வொரு நாடும்
    உரிமை விழைந்தும் இன்னுயிர் தம்மை
கொற்றெழிற் பீரங்கிக் குண்டுகள் முன்னே
    கோடி கோடியாய்க் கொடுத்திடுந் தன்மை!
சாற்றிடப் போதுமோ சலிப்பினை யொழித்து
    சக்தி சக்தியென் றேவுரை சாற்றி
ஆற்றல் கொண்டெழு அருந்தமிழ் எம்பீ!
    அடைகுவாய் வெற்றி மேல்வெற்றியாம்.

பங்கப் படுத்திடுந் தீங்கினை யெல்லாம்
    பதறி யோடின பயமினி யில்லை;
எங்கணுந் தொழில் முறை யியற்றிடுவோம் மிக
    எல்லாரு மோர்குல மாயினி யெழுவோம்;
சங்கட மின்றியெப் பயனும் சமமாய்ப்
    பகிர்ந்து வாழ்வினைச் சரிநிகர் செய்வோம்!
பொங்குங் கடலன்னப் பொறைமனம் பூண்டு
    புவிமுன் னெழுந்து வீறுகொள் தம்பீ!

—வெ. சா.

சமுதாய ஒப்பந்தம்

(ரூஸ்ஸோ எழுதியது)

6. சமுதாய ஒப்பந்தம்

மனிதன் ஒரு காலத்தில் இயற்கை நிலையில் வாழ்ந்துகொண்டிருந்தானல்லவா, அந்த நிலையிலேயே அவன் நிரந்தரமாக வாழ்ந்துகொண்டிருக்குமாறு அவனை நிர்ப்பந்தப்படுத்துகிற முட்டுக்கட்டைகளையெல்லாம் கடந்து செல்லக்கூடிய ஒரு தன்மையை அவன் அடைந்துவிட்டான் என்று நான் கருதுகிறேன். அப்படியானல், மனிதன் ஆரம்பகாலத்தில் வாழ்ந்து கொண்டிருந்ததைப் போல் இனியும் வாழ்ந்துகொண்டிருக்க முடியாது. மானிட சமூகமானது தான் வாழ வேண்டிய விதத்தை மாற்றிக்கொள்ளாவிட்டால் அஃது அழிந்துவிடும்.

மனிதர்களால் புதிய சக்திகளை உண்டுபண்ண முடியாது. ஆனல் ஏற்கனவேயுள்ள சக்திகளை ஒன்றுகூட்டி, அவற்றைக்கொண்டு செலுத்த முடியும். எனவே தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானல அப்படி காப்பாற்றிக்கொள்ள விடாதபடி எவை எவை தடைகளென்றனவோ அவற்றை எதிர்த்து நிற்கக்கூடிய சக்திகளையெல்லாம் ஒன்றுதிரட்டி அதனை மற்றொரு சக்தியால் செய்விப்பதைத் தவிர வேறு வழியில்லை.

பல சக்திகள் சேர்ந்தால்தான் ஒரு புதிய சக்தி உற்பத்தியாகும். ஆனல் ஒவ்வொரு மனிதனும் சுயமாக வாழ்வதற்கு முக்கிய துணைக் கருவிகளாயிருப்பன அவனுடைய சொந்த பலமும் அவன் அநுபவிக்கிற சுதந்திரமுந்தான். அப்படியிருக்க அவன்—அந்த மனிதன்—தனக்குத் தான் தீங்கு விளைவித்துக்கொள்ளாமலும் தன்னுடைய கடமைகளை மறந்து மேற்படி சொந்த பலத்தையும் சுதந்திரத்தையும் பிறருக்கு எப்படி ஒப்புக்கொடுத்துவிட முடியும்? இஃதொரு கஷ்டமான பிரச்னை. இதனை நான் எடுத்துக்கொண்டுள்ள விஷயத்தோடு பொருத்திப் பார்த்தால் பின்வரும் விதமாக அதனை விளக்கிச் சொல்லலாம்:—

"ஒரு சமுதாயத்தின் முழுச் சக்தியையும் கொண்டு அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த பிரதி மனிதனையும் அவனுடைய சொத்துக்களையும் பாதுகாக்கக்கூடியவிதமான ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அந்த ஸ்தாபனத்திற்கு எல்லாரும் கட்டுப்பட்டவர்களாயிருந்தபோதிலும் பிரதி மனிதனும், தனக்குத் தானே கீழ்ப்பட்டிருக்கிறவனாகவும் எப்பொழுதும்போல் சுதந்திரமுள்ளவனாகவும் இருக்கவேண்டும்."

இந்தப் பிரச்னைக்குச் சமுதாய ஒப்பந்தந்தான் சரியான பரிகாரமாகிறது.

இந்த ஒப்பந்தத்தின் ஷரத்துகள் எப்படி நிர்ணயிக்கப் படுகின்றனவென்று பார்ப்போமானால் இந்த ஒப்பந்தத்தின்படி எடுத்துக்கொள்ளப்படுகிற நடவடிக்கையைப் பொறுத்து நிர்ணயிக்கப்படுகின்றன. இந்த நடவடிக்கையில் ஏதேனும் ஒரு சிறிது மாற்றம் ஏற்படுமானால்கூட மேற்படி ஷரத்துகள் பயனற்றவைகளாகிவிடுகின்றன. இந்த ஷரத்துகள் ஒரு சம்பிரதாய முறையில் நிர்ணயிக்கப்படவில்லையேயாயினும் இவை எங்கும் ஒரேபடித்தாகத்தான் நிலவிக்கொண்டிருக்கின்றன. இவை எங்கும் ஒரேபடித்தாகத்தான் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இவை எப்பொழுது பயனற்றுப் போய்விடுகின்றனவென்றால் சமுதாய ஒப்பந்தமென்பது மறுக்கப்பட்டு ஒவ்வொரு மனிதனும் தனது சரித்திரத்தின் ஆரம்பகாலத்தில் அநுபவித்துவந்த பழைய உரிமைகளையும் இயற்கையான சுதந்திரத்தையும் மீண்டும் அடைந்து விடுகிறபோதுதான். அப்படி அவன் அடைகிறபோது, சம்பிரதாயமான சுதந்திரத்தை—அதாவது சமுதாய சுதந்திரத்தை—இழந்துவிடுகிறான்.

மேற்படி ஷரத்துக்களை நாம் சரியானபடி கிரகித்துக்கொண்டு பார்த்தோமானால் இவற்றின் சாரத்தை ஒரே ஒரு வாசகத்தில் கூறிவிடலாம். அதென்னவென்றால், ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உரிமைகளைச் சமுதாய நன்மைக்காகப் பராதீனப்படுத்திவிடவேண்டும். ஒவ்வொருவரும் இந்தமாதிரி பராதீனப்படுத்திவிடுவதால், எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கிற நிபந்தனைகள் ஒன்றுதான். இப்படி ஒரேமாதிரியான நிபந்தனைகள் ஏற்பட்டுவிடுமானால், இந்த நிபந்தனைகள் பிறருக்குச் சுமையாயிருக்குமாறு யாருமே நடந்துகொள்ளமாட்டார்கள்.

மேற்படி பராதீனப்படுத்திவிடுகிற செய்கையானது எவ்வித விகல்பத்துடனும் செய்யப்படுகிறதில்லையாகையால் சமுதாயத்திற்கும், அந்தச் சமுதாயத்திற்குட்பட்ட தனி மனிதனுக்கும் ஏற்படுகிற ஒற்றுமையானது பூரணத்துவமுடையதாகவே இருக்கும். தனிப்பட்டமனிதன் எவனும் தனக்கென்று விசேஷமான சலுகை எதனையும் கேட்கமுடியாது. அப்படி ஒரு சிலருக்கு மட்டும் பிரத்தியேகமான சில உரிமைகள் அல்லது சலுகைகள் கொடுக்கப்பட்டுவிடுமானால் நாளாவட்டத்தில் எல்லா உரிமைகளும் தங்களுக்கே வேண்டுமென்று அவர்கள் கேட்பார்கள். ஏனென்றால் அவர்களுடைய உரிமைகளையும் பொதுஜனங்களுடைய உரிமைகளையும் பரிசீலனைசெய்துபார்த்துச் சொல்லக்கூடிய பெரியார் யாரும் இருக்கமாட்டார்கள். எனவே ஒவ்வொருவரும் தங்களுடைய நியாயத்தைத் தாங்களே பைசல் செய்துகொள்ளக்கூடிய நிலைமைக்கு வந்துவிடுவார்கள். அப்பொழுது பழைய இயற்கை வாழ்வு நிலை ஏற்படும்; சமுதாயத்திற்கும் தனிமனிதனுக்கும் ஏற்படுகிற சம்பந்தமானது கொடுமையாக இருக்கும்; பயனற்றதாகவும் ஆகிவிடும்.

ஒவ்வொருவரும் பொதுவுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்துவிடுவதென்று

சொன்னால், யாரும் தங்களை யாருக்கும் தப்புக்கொடுக்கவில்லையென்று தான் அர்த்தம். மற்றவர்கள் தன் விஷயத்தில் எந்தவிதமான உரிமைகளோடு நடந்துகொள்ள வேண்டுமென்று ஒருவன் விரும்புகிறானோ அதேயாதிரி தானும் மற்றவர்களிடத்தில் நடந்துகொள்ளவேண்டியிருப்பதால், ஒவ்வொருவனும் தான் இழப்பதற்குச் சமமையான லாபத்தையும் அடைந்துவிடுகிறான்; அதுமட்டுமல்ல; தன்னைத்தான் காப்பாற்றிக்கொள்வதற்கான அதிகமான சக்தியையும் பெற்றுவிடுகிறான்.

எனவே சமுதாய ஒப்பந்தம் என்பதைக் கீழ்க்கண்ட வாசகத்தில் சுருக்கிச் சொல்லலாம்:—

"ஜனசக்தியின் மேலான மேற்பார்வைக்குப் பிரதி மனிதனும், தன்னையும் தன்னிடமுள்ள சக்தியையும் ஒப்புக்கொடுத்துவிடுகிறான்; அதற்குப் பிரதியாக, ஜனசக்தியினின்று பிரிக்கமுடியாத ஒரு பாகமாக பிரதி மனிதனையும் (தன் துணையாகப்) பெறுகிறான்."

இதனால் உடனே உண்டாயது என்ன? சமுதாய் ஒப்பந்தத்திலே சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பிரிவினரும் தனித்தனியாக இயங்குவதற்குப் பதிலாக, இந்த ஒன்று சேருமசெயலானது—அதாவது சமுதாய ஒப்பந்த மானது—உத்திரவாதமும் ஒற்றுமை உணர்ச்சியுமுள்ளஒருசபையை ஏற்படுத்திக் கொடுக்கிறது. இந்தச் சபையில் எத்தனை பேருக்குப் பேசுஞ் சக்தி இருக்கிறதோ அத்தனைபேரும் அங்கத்தினர்கள். இந்தச் சபை அமைப்புத்தான் மேற்படி சமுதாயத்தின் ஒற்றுமைச் சின்னமாகவும் அதன் ஜீவநாடியாகவும், அதன் சக்தியாகவும் இருக்கிறது. தனிப்பட்ட நபர்கள் சேர்ந்த இந்தப் பொதுஜன மனிதன்தான்—அதாவது பொதுஜன சபைதான்—முன்னர் நகரம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. இப்பொழுது குடியரசு என்று அழைக்கப்படுகிறது. இந்தக் கூட்டுறவே—அதாவது மேற்படி பொதுஜன சபையே—சலனமற்றிருக்கிற போது ராஜ்யம் என்றும், சலனஞ் செய்துகொண்டிருக்கிறபோது அரசு என்றும், மற்ற ஸ்தாபனங்களோடு ஒப்பிடுகிறபோது அதிகாரம் என்றும் அழைக்கப்படுகிறது. மேற்படி சபையில் சேர்ந்த தனிப்பட்ட நபர்கள் பொதுவாக அழைக்கப்படுகிறபோது ஜனம் என்றும், தனிப்பட்ட நபர்கள் என்ற ஹோதாவில் மன்பதைகள் என்றும், ராஜ்யத்தின் சட்டத்திற்குட்பட்டவர்கள் என்ற முறையில் பிரஜைகள் என்றும் கூறப்படுகிறார்கள். ஆனால் இந்தச் சொல் வழக்குகள் அடிக்கடி குழப்பப்பட்டுத் தவறாகவே உபயோகிக்கப்படுகின்றன. இவைகளை எந்தெந்த சந்தர்ப்பத்தில் எப்படி எப்படி உபயோகிக்க வேண்டுமென்று தெரிந்துகொண்டால்மட்டும் போதுமானது.

7. அரசு

முன் அத்தியாயத்தில் சொன்ன கூட்டுறவு—அதாவது சமுதாயத்திற்கும் தனிப்பட்ட நபருக்கும் ஏற்பட்டிருக்கிற ஒப்பந்தம்—பொதுஜனமும் தனிப்பட்ட நபரும் பரஸ்பரம் நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கிறது. பிரதி மனிதனும்—அந்த மனிதன்

தான் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்குத் தானே கட்டுப்பட்டவனாகிறானல்லவா?—இரண்டுவித சம்பந்தங்களையுடையவனாயிருக்கிறான். அரசினுடைய அங்கம் என்ற முறையில் தனிப்பட்ட நபர்களுடன் ஒருவித சம்பந்தம்; ராஜ்யத்தின் அம்சம் என்ற முறையில் அரசனுடன் ஒருவித சம்பந்தம். ஆனால் இங்கே யாரும் தனக்குத் தானே செய்துகொண்ட ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டவனாகமாட்டான் என்ற ஜன சமூக சம்பந்தமான சட்டத்தை பிரயோகித்துப் பார்க்கக் கூடாது. ஏனென்றால் தனிப்பட்ட மனிதன் என்ற ஹோதாவில் தனக்குத் தான் செய்துகொள்கிற ஒப்பந்தத்திற்கும் சமுதாயத்தின் ஒரு பாகஸ்தன் என்ற முறையில் (தன்னோடு) தான் செய்துகொள்கிற ஒப்பந்தத்திற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது.

மேலே சொன்ன இரண்டுவித சம்பந்தத்தில், பொதுஜனங்களுக்கும் அரசுக்கும் ஏற்படுகிற சம்பந்தம் ஒன்றல்லவா? இதன்படி அரசுக்கு எல்லாப் பிரஜைகளும் கட்டுப்பட்டவர்களாகிறார்கள். ஆனால் வேறொரு காரணத்திற்காக, அரசானது தன்னையே தன் கட்டுக் குட்படுத்திக் கொள்ளமுடியாது. ராஜ்யாதிகார சக்தியானது தன்னால் புறக்கணித்து விடமுடியாத ஒரு சட்டத்தை தானே விதித்துக்கொள்ளுமென்று எதிர்பார்ப்பது அரசியல் சம்பிரதாயத்திற்கே விரோதமானது. தனிப்பட்ட மனிதன் தனக்குத்தானே செய்துகொள்கிற ஒப்பந்தம் என்ற ஹோதாவில் தான் இந்தச் சம்பந்தத்தைக் கவனிக்க முடியும். ஒரு மனிதன் தனக்குத்தானே ஒப்பந்தம் செய்துகொண்டதுபோலத்தான் இது. இதனால், பொதுஜன சபையை—சமுதாய ஒப்பந்தத்தைக்கூட—கட்டுப்படுத்தக் கூடிய எந்தச் சட்டமும் இல்லை; இருக்க முடியாது என்பது பெறப்படுகிறது. இதனால் மேற்படி ஜன சபையானது, சமுதாய ஒப்பந்தத்திற்கு விரோதமில்லாமல் மற்றவர்களுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளக் கூடாது என்பது அர்த்தமல்ல; அந்நியர்களோடு ஒப்பந்தம் செய்து கொள்கிறபோது, அவர்களைத் தனிப்பட்ட நபர்களாகத்தான் கருதவேண்டும்.

மேலே சொல்லப்பட்ட பொதுஜன சபையோ, அல்லது அரசோ, ஜன சமுதாயத்திற்கும் தனிப்பட்ட நபர்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் புனிதத்தன்மையினாலேஉண்டானவை. இதனால் மேற்படி பொதுஜன சபையோ அல்லது அரசோ, மேற்படி ஒப்பந்தத்திற்கு விரோதமாக—உதாரணமாக தன்னுடையதில் (அதாவது தன்னுடைய உரிமைகளில்?) ஒருபாகத்தைப் பராதீனப் படுத்துவதென்பதோ, அல்லது மற்றோர் அரசுக்குப் பணிந்துவிடுவதென்பதோ—ஒன்றையும் செய்யக் கூடாது. எந்தச் சட்டத்தினால் அது—அந்தப் பொதுஜனசபை அல்லது அரசு—ஸ்தாபிதமாயிற்றோ அந்தச் சட்டத்தையே மீறி நடப்பதென்றால் அது தன்னைத் தானே அழித்துக் கொள்வதாகும். ஒன்றுமில்லாத ஒன்றிலிருந்து ஒன்றுமில்லாத ஒன்று தானே பிறக்கும்.

பொதுஜனங்கள் ஒரே ஸ்தாபனமாக ஒன்றுபட்டு விடுவார்களானால்

மேற்படி ஸ்தாபனத்தைத் தாக்கினால் தனிப்பட்ட நபர்களுக்குப் பாதகம் உண்டாகும். அப்படியே தனிப்பட்ட நபர்களைத் தாக்கினால் அதுஸ்தாபனத்தையும் பாதிக்கும். எனவே, உபய கட்சிகளும்—அதாவது மேற்படி ஸ்தாபனமும் தனிப்பட்ட நபரும்—கடமை, பரஸ்பர நன்மை என்பவைகளை முன்னிட்டு ஒன்றுக்கொன்று உதவி செய்துகொள்ள வேண்டும். மேலே சொன்ன இரண்டுவித சம்பந்தத்தினால் ஏற்படுகிற அதிகமான நன்மைகளையே மனிதர்கள் தேட முயல வேண்டும்.

தனிப்பட்ட நபர்களிலிருந்துதான் அரசு உண்டாகிறது. ஆகையால் அந்தத் தனிப்பட்ட நபர்களாகிய பொதுஜனங்களுடைய நன்மைக்கு விரோதமாக அரசினுடைய நன்மை இருக்க முடியாது. எனவே, மேற்படி ராஜ்யாதிகார சக்தியானது, தனது தற்காப்புக்காகப் பிரஜைகளிடமிருந்து எவ்வித உறுதிமொழியும் பெற வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் பல அவயவங்களால் ஒன்று சேர்க்கப்பட்ட தேகமானது அந்த அவயவங்கள் அனைத்திற்கும் ஊறு செய்ய வேண்டுமென்று நினைக்காது. தனிப்பட்ட நபர்கள் என்ற முறையில் யாரையும் மேற்படி ராஜ்யாதிகாரம் ஊறுசெய்ய முடியாது என்பதையும் இனிவரும் அத்தியாயங்களில் காண்போம். ராஜரிகம் என்பது ராஜரிகமா யிருப்பதால், அது எப்பொழுதும் அப்படித்தான் இருக்கும்.

ஆனால் பிரஜாசக்திக்கும் அரச சக்திக்கும் உள்ள சம்பந்தம் இப்படியில்லை. இரண்டுக்கும் பொதுவாக உள்ள நலன்கள் ஒன்றேயாயினும் பிரஜா சக்தியானது, தனது அன்றாடக் காரியங்களைச் செய்துகொண்டு போக போதிய பாதுகாப்புகளைத் தேடும். அந்தப் பாதுகாப்புகளை நடைமுறையில் கொணரக் கூடிய சாதனங்களும் தனக்குத் தேவையென்று அது எதிர்பார்க்கும்.

ஒரு ராஜ்யத்தைச் சேர்ந்த பிரதி நபரும், தனிப்பட்ட மனிதன் என்ற ஹோதாவில் ஒருவித அபிப்பிராயங் கொண்டிருக்கலாம். ஜன சக்தியின் ஒருபாகம் என்ற ஹோதாவில், மேற்படி அபிப்பிராயத்திற்கு விரோதமான அபிப்பிராயங் கொண்டிருக்கலாம். அவனுடைய சொந்த நன்மையானது, பொது நன்மைக்கு விரோதமாக எண்ணச் செய்யலாம். தனி மனிதன் என்ற ஹோதாவில் அவனுக்கு இயற்கையா யமைந்துள்ள சுதந்திரமானது, பொது நலத்திற்காகத் தன்னலத்தை ஓரளவு பாராதீனப் படுத்திக் கொடுக்கிறானே அதுதான் மனமுவந்து அளிக்கிற ஒரு நன்கொடை என்றும், அந்த நன்கொடையானது அளிக்கப்படாவிட்டால் மற்றவர்களுக்கு அதனால் அதிக பாதகம் ஏற்படாது என்றும், ஆனால் அந்த நன்கொடையை அளிக்கும் பட்சத்தில் தனக்கு அதிகச் சுமை ஏற்பட்டுவிடுமென்றும் அவனை—அந்தச் சுதந்திர புருஷனை—நினைக்கச் செய்யலாம். ஆனால் ஒரு ராஜ்யத்தில் ஒழுக்க சீலர்களும் இருப்பார்களென்று வைத்துக் கொள்வோமானால் அவர்கள் கற்பனை புருஷர்களாகவே இருப்பார்கள். ஆகையால், எந்த நபருக்கும், ஒரு பிரஜையின் கடமையைச் செய்யாமல், அரசின்

உரிமைகளை மட்டுந்தான் அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணம் வளர்ந்து கொண்டு போனால் அரசின் அழிவு ஏற்படுவது நிச்சயம்.

சமுதாய ஒப்பந்தம் என்பது ஒரு சம்பிரதாய ஒப்பந்தமாக ஆகாதிருக்க வேண்டுமானால் கீழ்க்கண்ட நிபந்தனைகளும் அதில் இருக்கவேண்டும். அதாவது எவனொருவன் ஜன சமூகத்தின் இச்சைக்குக் கீழ்ப்படிய மறுக்கிறானோ அவன் அந்த இச்சைக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு கட்டாயப் படுத்தபபட வேண்டும். அப்படி அவன் செய்யாவிட்டால் அவன் சுதந்திரமா யிருக்க முடியாது. இந்த நிபந்தனை யிருந்தால்தான் ஒவ்வொருவனும் தன் தாய்நாட்டோடு ஐக்கியப் படுவான். அவனுக்குப் பிறருடைய தயவை நாடவேண்டிய அவசியம் ஏற்படாது. பிரஜைகளுக்கு இந்த நிலைமை ஏற்பட்டால்தான் அரசியல் நிருவாகமும் சரியாக நடைபெறும். சிவில் விவகாரங்கள் ஒழுங்காக நடைபெறும். இல்லாவிட்டால் ராஜரீகத்தில் அனேக ஒழுங்கீனங்கள் ஏற்படக் கூடும்.

8. சிவில் ராஜ்யம்

மனிதன் இயற்கையான வாழ்க்கை நிலைமையி லிருந்து சமுதாயமாகச் சேர்ந்து வாழக்கூடிய நிலைமைக்கு வந்தவுடனேயே அவனிடத்தில் ஒரு பெரிய மாறுதல் உண்டாகிறது. இயற்கையான வாழ்க்கை நிலைமையிலிருந்த போது அவன், அவ்வப் பொழுது எழுகிற உணர்ச்சி பாவங்களைக் கொண்டே காரியங்களைச் செய்து வந்தான். இப்பொழுது— அதாவது சமுதாய வாழ்க்கையைத் தொடங்கியதும்—தான் செய்கிற ஒவ்வொரு காரியமும் நியாயமா வென்று பார்த்துத்தான் செய்கிறான். மற்றும் தான் செய்வது தர்மமா வென்று பார்த்தும் செய்கிறான். இதற்கு முன்னே அப்படியில்லை. இயற்கையான வாழ்க்கை நிலையிலிருந்து சமுதாய வாழ்க்கை நிலைக்கு வந்தவுடனேயே மனிதன் தன் தேக பலத்தைக் கொண்டு ஒருகாரியத்தைச் செய்வது என்பதற்குப் பதிலாக, கடமையை முன்னிட்டு அதே காரியத்தைச் செய்கிறான்; விருப்பம் தோன்றுகிறபோது ஒரு காரியத்தைச் செய்தல் என்பதற்குப் பதிலாக சட்டரீதி என்கிற வரம்புக் குட்பட்டு அந்தக் காரியத்தைச் செய்கிறான்; தனக்கு எப்படி எப்படி இச்சைகள் போகின்றனவோ அப்படி யெல்லாம் காரியங்களைச் செய்யாமல் தன் அறிவுக்கு உகந்தவாறு காரியங்களைச் செய்கிறான்; இதுவரையில் தன்னொருவனையே, மையமாக வைத்துக் கொண்டு வாழ்க்கையை நடத்திக் கொண்டுவந்த ஒரு மனிதன், இப்பொழுது வேறு சில லட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையை நடத்தத் தொடங்குகிறான். இந்த மாறுபாட்டினால் மனிதன் இயற்கையான வாழ்க்கை நிலையில் இருந்த போது அநுபவித்து வந்த சில சாதகங்களை இழந்து விடுகிறான் என்பது வாஸ்தவம்; ஆனால், அவைகளுக்குச் சமதையான வேறு சில சாதகங்களை திரும்பவும் பெறுகிறான். உதாரணமாக, அவனுடைய திறமைகள் அடிக்கடி உபயோகிக்கப் படுகின்றன; அதனால் அவை விருத்தியடைகின்றன. அவனுடைய எண்ணங்கள் விசாலமடைகின்றன; அவனுடைய உணர்ச்சி பாவங்கள் பெருந்தன்மை யடைகின்றன; அவனுடைய ஆத்மா புனிதத்

தன்மை அடைகிறது. எனவே புதிய மாறுதலின் காரணமாக—அதாவது இயற்கை நிலைமையிலிருந்து சமுதாய நிலைமைக்கு வருவதாகிற மாறுதலினால்—ஏற்படுகிற சாதகங்கள் சில சமயங்களில் துஷ்பிரயோகம் அடைந்த போதிலும் அவன்—அந்த மனிதன்—அந்த இயற்கை நிலைமைக்கும் கீழாகப் போவதில்லை. அந்த நிலைமையிலிருந்து விடுதலை யடைந்ததற்காகவும் அறியாமையோடு கூடிய ஒரு மிருகமாக இருந்த தான் அறிவு நிரம்பிய ஒரு மனிதனாகப் பரிணமித்ததற்கும் தன்னைத் தான் ஆசீர்வதித்துக் கொள்கிறான்.

இந்த மாறுதலை நாம் சுலபமாகத் ஒத்திட்டுப் பார்க்குமாறு வேறுவிதமாகக் கவனிப்போம். சமுதாய ஒப்பந்தத்தின் காரணமாகமனிதன் தான் இயற்கையாக அனுபவித்துவந்த சுதந்திரத்தை இழந்து விடுகிறான். அதாவது, தன்மனதில்தோன்றியதையெல்லாம் தன்னிஷ்டப்படிக்கும்தன்சக்திக்கிசைந்தவாறும் வரம்பின்றிச் செய்து வந்த ஓர் உரிமை இருந்துவந்ததாலல்லவா, அதனை இழந்து விடுகிறான்; அதற்குப் பதிலாக, தன் உடைமைகளின் விஷயத்தில் ஒருவித உரிமையையும் மேற்படி உடைமைகளை தன் சொந்த ஆஸ்தியாக அநுபவிக்கிற ஸ்வாதந்தரியத்தையும் அடைகிறான். இந்தச் சந்தர்ப்பத்தில் மனிதன் இயற்கையாக அனுபவித்துவந்த சுதந்திரத்திற்கும், சமுதாய நிலைமைக்கு வந்தபிறகு அனுபவிக்கிற சுதந்திர நிலைமைக்கும் (ஸிவில் சுதந்திரத்திற்கும்) என்ன வித்தியாசம் என்பனதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். இயற்கை சுதந்திர மென்பது ஒரு தனி மனிதனுடைய சக்தி யளவோடு நின்றுவிடுகிறது. சமுதாயத்தின் ஒரு பாகத்தினன் என்ற முறையில் மனிதன் அநுபவிக்கிற ஸிவில் சுதந்திரமானது ஜன சக்தியின் வரம்புக் குட்பட்டது. தவிர, உடைமை என்று மேலே சொன்னேனல்லவா? அந்த உடைமையென்றால், பலாத்காரத்தின் விளைவாகவோ, முதல் முதலாக ஒருவனுடைய சுவாதீனத்திற் குட்பட்டது என்ற காரணத்தின் விளைவாகவோ அவன் அநுபவிக்கிற சொத்துக்களுக்கே பெயராகிறது. ஆனால், ஆஸ்தி என்றாலோ அதனை—அந்த உடைமைகளைத்தான் உரிமையோடு அனுபவிக்கிற பாத்தியதையை அடிப் படையாகக் கொண்டது.

மற்றும் மனிதன் சமுதாய வாழ்க்கையை நடத்தத் தொடங்கியதும் ஒருவித மனோ சுதந்திரம் பெறுகிறான். ஒரு மனிதன் தனக்குத்தானே எஜமானாக இருக்க வேண்டுமானால் இந்த மனோ சுதந்திரம் அவனுக்கு ஏற்பட்டால்தான் முடியும். விருப்பம் போல் காரியங்களைச் செய்வது என்பது அடிமைத்தனம்; ஆனால், தானே வகுத்துக் கொண்ட ஒரு சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பது என்பது சுதந்திரம். ஆனால், இதைப்பற்றி ஏற்கனவே நான் அதிகமாகக் கூறிவிட்டிருக்கிறேன். சுதந்திரம் என்பதற்கு தத்துவார்த்தம் என்னவென்பதைப் பற்றி விளக்கிச் சொல்வது இப்பொழுது நான் எடுத்துக் கொண்டுள்ள விஷயத்திற்குப் புறம்பானதாகும்.

—ஏ. பரமேசுவரன் பிள்ளை

ஆதி மனிதன் எப்படி வியாபாரம் செய்தான்?

மனித சரித்திரத்தை நாம் ஆராய்ந்தோமானால் மனிதன் எப்பொழுதுமே, தனித்து வாழ்ந்ததில்லையென்பது தெரிகிறது. அவன் தனித்து ஒண்டியாக வாழவும் முடியாது. இதனாலேதான் மனிதனை சமூகப் பிராணி யென்றுங்கூடக் கூறுவதுண்டு. மனிதர்கள் கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து வாழ்வதுண்டு. அவர்கள் தங்களுடைய தேவைக்காக தங்களால் செய்யப்பட்ட பொருள்களைத் தங்களுக்குள் பிரித்துக்கொண்டு வாழ்ந்தார்கள். இவ்விதம் பொருள்கள் பரிவர்த்தனை செய்து கொள்ளப் படுவதையே "வியாபாரம்" என்று அழைக்கப்பட்டது. இன்று லட்சக் கணக்கிலும், கோடிக் கணக்கிலும் வியாபாரங்கள் நடைபெறுவதை நாம் கண் முன்னால் பார்க்கின்றோம். ஆனால் ஆரம்பகாலத்தில் இந்தமாதிரி வியாபாரம் நடைபெறவில்லை. அந்தக் காலத்து மனிதர்கள் எந்தப் பொருளைத் தாங்கள் உற்பத்தி செய்கிறார்களோ அதையே ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டு வாழ்ந்திருக்கிறார்கள். காட்டுப் பழங்களையும் காய்களையும் தின்று வாழ்ந்துகொண்டிருந்த அந்தக்காலத்து மனிதர்கள், அந்தக் காய்களையும், பழங்களையுமே தங்களுக்குள் பரிவர்த்தனை செய்துகொண்டிருக்கலாம். குடும்பம் அல்லது சமூகமாகச் சேர்ந்து வாழ்ந்த மனிதர்கள், தங்களுடைய வேலைகளையும் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டு பார்த்திருக்கலாம். நாம் கூர்ந்து நோக்குங்கால் மனித சமூகத்தில், இந்த வியாபாரமும் பண்டங்களின் பரிவர்த்தனையும் அந்தக்காலத்திலேதான் தொடங்கியிருக்கவேண்டுமென்று தெரிகிறது. ஆடவர்கள் காடுகளிலும் வனங்களிலும் அலைந்து பழங்களைச் சேகரித்து வருவார்கள். பெண்டிர் அவற்றைப் பக்குவப்படுத்தியும் சமைத்தும் தங்களுடைய குழந்தைகளைக் காப்பாற்றுவார்கள். இதுவுங்கூட ஒருவகையான வியாபாரந்தானல்லவா? ஆடவன் சாப்பாட்டுக்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்து வந்து மனைவிக்குக் கொடுக்கிறான். அதற்குப் பதிலாக அவனுடைய மனைவியானவள் வீட்டுக் காரியங்களை கவனித்துக்கொண்டு தங்களது குழந்தைகளையும் காப்பாற்றிக்கொள்ளுகிறாள். இதுவும் ஒருவகையான வியாபாரந்தான். ஆனால் இந்த வியாபாரத்தில் பண்டங் கொடுத்து பண்டம் மாற்றிக்கொள்ளப்படுவதில்லை. சிரமத்திற்குப் பதிலாக சிரமம் மாற்றிக்கொள்ளப் படுகிறது. இப்படிப்பட்ட நிலையிலிருந்த இந்த வியாபாரமானது கொஞ்சம் வியாபகமடைந்தது. ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டுக்கும் ஒரு குடும்பத்திலிருந்து மற்றொரு குடும்பத்திற்கும், ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு

கிராமத்திற்கும் பண்டங்களைப் பரிமாறிக்கொள்ளத் தலைப்பட்டார்கள். படிப்படியாக வியாபாரம் எப்படி விருத்தியடைந்து வருகிறது பார்த்தீர்களா? ஆனால் இன்னும் ஒன்று நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். இவ்விதம் வியாபாரமானது ஒரு கிராமத்திற்கும் இன்னொரு கிராமத்திற்கும் விருத்தியடையத் தலைப்பட்டபோது இடையில் பல விஷயங்கள் முளைத்தன. ஒன்று மனிதர்களிடையில், "தன்னுடைய சொந்தச் சொத்து" என்ற எண்ணம் உண்டாயிற்று. இதையொட்டியே அடுத்து பண்டங்களைக் கொடுத்து வாங்குவதற்குத் தடங்கலில்லாமல் கொடுத்து வாங்கும் பண்டங்களை நிறுத்துக் கொடுத்து வாங்கவும், அப்படிக் கொடுத்து வாங்கும் பண்டங்களுக்குப் பதிலாக குறிப்பிட்ட ஒரு பொருளைத் தங்களுக்குள் உபயோகித்துக்கொள்ளவும் வேண்டியதேற்பட்டது. இந்தக் குறிப்பிட்ட ஒரு பொருளுக்குத்தான் "ரூபாய்" என்று பெயர் சூட்டப்பட்டது. ரூபாய் என்று கூறியவுடன் இந்தக் காலத்து வெள்ளி, செம்பு, தங்க நாணயங்களைப்போலிருந்ததாகவோ, அவற்றை நம்முடைய அந்தக்காலத்து முன்னோர்கள் புழங்கியதாகவோ நினைத்துக் கொள்ளவேண்டாம். இப்படி வட்டமாகவோ, சதுரமாகவோ வரை வரையாகவோ, முகர் குத்தியோ இருக்கவில்லை. அவர்கள் புழங்கிக்கொண்ட நாணயங்கள் அவர்களிடத்திலிருந்த கால் நடைகள்தான். ஒரு மனிதனுடைய சொத்தை மதிப்பிடுவதாயிருந்தால் இப்பொழுதைப் போல் காகித நோட்டுக்களைக் கொண்டு லட்சாதிபதி, கோடீஸ்வரன் என்று மதிப்பிடுவதில்லை. அவனிடத்திலிருக்கும் கால் நடைகளைக் கொண்டுதான் அவனுடைய சொத்தை மதிப்பிடுவது. சொந்த உடைமை அல்லது சொத்து என்ற எண்ணம் வலுவடைந்து பழக்கத்திற்கு வந்த காலத்தில் ஒருவனிடத்தில் எத்தனை ஆடு மாடுகள் இருக்கின்றனவோ அவற்றைக் கொண்டுதான் அவனை எவ்வளவு சொத்துக்காரன் என்று மதிக்கும்படி நிலைமை யேற்பட்டது.

இதுவரை, மனிதன் உற்பத்தி செய்யும் பொருள்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வது வியாபாரம் என்பது மனித சமூகத்தில் இடம்பெற்றது. சொந்தச் சொத்து என்ற எண்ணம் ஏற்பட்டதற்குக் காரணம், நாணயம் தோன்றியதற்குள்ள அவசியம் இவைகளை நாம் தெரிந்தோம். அடுத்து பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதன் நோக்கங்களையும் தன்மைகளையும் பற்றி ஆராய்வோம்.

பொருள் உற்பத்தி செய்யப் படுவதின் நோக்கமும் தன்மையும்

பொருள் உற்பத்தி, இரண்டு விதப் பிரயோசனங்களைக் கருதிச் செய்யப் படுகிறது.

1. மனிதன், தன்னுடைய தேவைகளுக்காக உபயோகிக்கப் படுவது. இதை, உபயோகப் பொருள்களின் உற்பத்தி என்று நாம் அழைப்போம்.

2. வியாபாரத்திற்காகச் செய்யப் படும் பொருள் உற்பத்தி. இதை,

வியாபாரப் பொருள் உற்பத்தி என்ற பெயரால் அழைப்போம்.

அதாவது, தேவையை முன்னிட்டு உபயோகப் படுத்து வதற்காகச் செய்யப்படுவது ஒன்று, வியாபாரத்திற்காக உற்பத்தி செய்யப் படுவது ஒன்று. ஆக இருவிதப் பிரயோஜனங்களைக் கருதி பொருள்கள் உற்பத்தி செய்யப் படுவதாய் நாம் அறிகிறோம். உபயோகத் திற்காகச் செய்யப் படுவதை "இயற்கை உற்பத்தி யென்றும்" வியாபாரத் திற்காகச் செய்யப்படுவதை " மார்க்கெட் உற்பத்தி" யென்றும் பொருளாதார ஆசிரியர்கள் பெயரிட்டு அழைக்கிறார்கள். வியாபாரம் என்ற தொழில் மனித சமூகத்தில் நடைபெற ஆரம்பித்துங்கூட உபயோகத் திற்காகப் பொருள் உற்பத்தி செய்வது தடங்க லில்லாமல் நடைபெற்றுக் கொண்டேதான் வந்தது. ஏனெனில் அந்தக் காலத்தில், வியாபாரம் என்பது, ஒருவருக் கொருவர் பண்டங்களை மாற்றிக் கொள்ளும் தொழிலாக இருந்ததே தவிர லாபத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வில்லை யென்பதை நாம் நினைவிலிருத்திக் கொள்ளவேண்டும்.

மனித சமூகத்தில், ஆண்டான்—அடிமை, அதாவது, எஜமானன், வேலையாள் என்ற பழக்கம் ஏற்பட்டு அந்த எஜமானன் தன்னுடைய வேலைக்காரனிடத்தில் வேலைவாங்கி அவ்விதம் அவ் வேலைக்காரன் உழைத்து அவனால் செய்யப்படும் பொருள்களும் அந்த எஜமானனுடைய உபயோகத் திற்காகவே செய்விக்கப் பட்டதேயல்லாது, வியாபாரத்திற்காகச் செய்விக்கப் படவில்லை. தன்னுடைய வேலைக் காரனைக் கொண்டு செய்விக்கப் பட்ட பொருளை எஜமானன் விற்பனை செய்வது கிடையாது. ஆனால் மனித சமூகத்தில் வியாபாரம் என்ற தொழில் நாளடைவில் பெருகப் பெருக உபயோகத் திற்காகப் பண்டங்கள் உற்பத்தி செய்யப் படுவதுபோய், மார்க்கெட்டு களில் விற்பதற்காகவே பண்டங்களை உற்பத்தி செய்யும்படியான நிலைமை யேற்பட்டது. இதைப் பற்றி காரல் மார்க் ஸினுடைய பிரதம சிஷ்யரான ஏஞ்சல்ஸ் என்ன கூறுகிறார் என்பதைக் கவனிப்போம்:—

"பூர்வ காலத்து மனிதர்கள் சமூகம், சமூகமாகச் சேர்ந்து வாழ்ந்து கொண்டிருந்த ஆரம்ப காலத்தில் தங்களுக்குத் தேவைப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்து கொண்டிருந்தார்கள். இவர்கள் தங்களுக்குள் அமைத்துக் கொண்டிருந்த சமூக வாழ்க்கை யானது ஒருவாறு இயற்கையாகவே பொதுவுடமைரீதியில் அமைந்துள்ள சமூகமாகவே இருந்தது என்று கூற வேண்டும். பின்னே, இவர்கள், தங்களுடைய தேவைக்குப் போக மிஞ்சிய பொருள்களை, அதே கூட்டத்தில் உள்ள மற்றவர் களுக்குக் கொடுத்து அவர்களிட மிருந்து தங்களுக்குத் தேவையான சில பொருள்களைப் பெற்றுக் கொள்ளும் வழக்கம் ஏற்பட்டது. இந்த முறையானது கொஞ்சம் வியாபகமாகி, ஒரு சமூகத்திலுள்ள மனிதர்கள் இன்னொரு சமூகத்திலுள்ள மனிதர்களுக்குத் தங்களுடைய பொருள்களைக்கொடுத்தே அவர்களிட மிருந்து சில பொருள்களைப் பெற்றுக் கொள்ளும் நிலைமைக்கு வந்தார்கள். இந்த நிலைமை யேற்பட்டதிலிருந்து மனிதர்கள், ஒருவருக்

கொருவர் பொருள்களைப் பரிமாறிக் கொள்ளும் அவசியத்தைத் தெரிந்து அதற்குத் தகுந்தவாறு பொருள்களை உற்பத்தி செய்யத் தொடங்கினார்கள். இப்பால், இவ்விதம் பொருள்களைப் பரிமாறிக் கொள்ளும் முறையானது, சமூகத்தில் ஜனத்தொகை அதிகரித்ததற்குத் தகுந்தவாறு கொஞ்சம் பெரிய முறையில் ஆரம்பமாகியது. இந்தக் காலத்தில்தான் மனிதர்களுக்கு "சொந்தச் சொத்து" என்பதில் எண்ணம் ஏற்பட்டது. தங்களுக்கென்று சில பொருள்களை ஒதுக்கி வைக்கத் தலைப்பட்டார்கள். இதையேதான், தனிச் சொத்து, அல்லது தனி உடைமை யென்று கூறுவது. இந்தத் தனி உடைமை யெண்ணம் மனித சமூகத்திலே வலுத்து வந்தாலுங் கூட, அவரவர் உபயோகத்திற்காகப் பொருள்களைஉற்பத்தி செய்யும் பழக்கம் நடைபெற்றுக் கொண்டுதானிருந்தது. தங்களுடைய உபயோகத்திற்கு மிஞ்சிய சில பொருள்களையே அவர்கள் மற்றவர்களிடம் பரிமாறிக் கொண்டார்கள். ஒவ்வொரு குடும்பத்தாரும், விவசாயத்தையோ, மிருகங்களை வளர்ப்பதையோ மாத்திரம் தொழிலாகச் செய்து கொண்டிருக்கவில்லை. மூலப் பொருளாகிய பஞ்சைக் கொண்டு நூல் நூற்று ஆடை நெய்தார்கள்; தங்களுக்கு அவசியமான சில ஆயுதங்களைச் செய்து கொண்டார்கள். இஃதே போன்று பண்படாத மூலப் பொருள்களைக் கொண்டு சில செய்பண்டங்களைத் தாங்களே தயாரித்துக் கொண்டிருந்தார்கள். அதாவது, இவர்கள் தங்களுக்கு அவசியமான பொருள்களைத் தாங்களே தயார் செய்து கொண்டார்களேயல்லாது, தங்களுக்குத் தேவைப்படும் பொருள்களுக்காக மார்க்கெட்டுகளில் வாங்கும்படியான நிலைமை யேற்படவில்லை,

முதலாளித்துவத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்று வரும் தேசங்களில், தொழில் முயற்சிகளும் அவற்றின் மூலமாகப் பொருள் உற்பத்தியும் ஏராளமாகப் பெருகி விட்டதால், அப்படிப்பட்ட தேசத்திலே வாழும் ஜனங்கள், தங்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் வியாபார மூலமாகவே பெற்றுக் கொள்ளுகிறார்கள். ஆனால், இன்றுங் கூட சில கிராமங்களில் உள்ள ஜனங்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களைத் தாங்களே செய்து கொள்வதை நேரடி அனுபவமுடையவர்கள் தெரிந்திருப்பார்கள்.

ஆனாலும் முதலாளித்துவ முறையானது நிலைபெற்றுவிட்ட தேசங்களில், ஜனங்களுடைய தேவைக்காகப் பொருள் உற்பத்தி செய்வதென்பது இல்லாமலே போய்விடுகிறது. முதலாளித்துவ முறையானது ஆரம்ப ஸ்திதியிலுள்ள தேசங்களில் ஜனங்களுடைய தேவைக்காகப் பொருள்களைத் தயாரிப்பது ஒருவாறு நடைபெற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் முதலாளித்துவ முறையானது பலப்பட்டு விட்டால் ஜனங்களுடைய தேவைக்காகப் பொருள் உற்பத்தி செய்வதென்பது இல்லாமலே போய்விடுவது திண்ணம். இன்று கண்கூடாக நடப்பதுவும் இதுதான்.

உலகத்தில் முதலாளித்துவக் கொள்கையானது நிலைபெறுவதற்குமுன்னே மனிதர்கள் தாங்கள்செய்யும் பொருள்

களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டார்கள் என்று நான் கூறினேன். இவ்விதம் பொருள்களைப் பிரித்துக்கொள்வதில், லாபம் என்பது தலை காட்டவில்லை. இவர்கள் பொருள்களைப் பிரித்துக்கொண்டார்களென்றால் தங்களுக்குள் வேலைகளையோ, அல்லது சிரமத்தையோ பிரித்துக்கொண்டதாய்த்தான் கொள்ளவேண்டும். இதைப்பற்றி மேலே கூறியிருக்கிறேன்.

நம்முடைய தேசத்தை இன்னமும் ஒரு முதலாளித்துவக் கொள்கையை ஆரம்பிக்கும் தேசமாகக் கூறமுடியாது. முதலாளித்துவக் கொள்கை இங்குச் சரியாக இன்னமும் வேரூன்றிவிடவில்லை. தொழில் பெருக்கமும் ஜாஸ்தியில்லை. இதனால் விஷயத்தை விளங்கிக்கொள்வது சுலபமாகும். நம்முடைய தேசத்தில் இப்பொழுதுங்கூட தொழில் செய்பவர்களை இரு வகையினராகப் பிரிக்கலாம். இவர்கள் பிரிந்தேதானிருக்கிறார்கள். வயல்களில் வேலை செய்யும் விவசாயிகள். இதர தொழிலாளிகள், விவசாயிகள் தங்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உழுதுண்டு வாழுகின்றனர். ஆனால் இதர தொழிலாளியென்று நான் கூறியிருக்கிறேனல்லவா? ஒரு கன்னானை யெடுத்துக் கொள்வோம். பாத்திரம் செய்வது அவனுடைய தொழில். ஆனால் அவன் பாத்திரம் செய்வது நேரடியாக அவனுடைய தேவையைப் பூர்த்திசெய்வதற்காக இல்லையல்லவா? முதலாளித்துவத்தை அடிப்படையாகக்கொண்டு செய்யப்படவில்லையானாலுங்கூட அந்தக் கன்னான் செய்யும் சாமான்கள் யாவும் மார்க்கெட்டிற்குப்போய் விலையாகவேண்டியவை. ஆனால் நாம் இங்கு கவனிக்கவேண்டியது என்னவென்றால் லாபம் ஒன்றையே குறியாகக்கொண்டு ஏராளமாகச் செய்யப்படும் முதலாளித்துவ முறைக்கும் இந்தக் கருமானுடைய பொருள் உற்பத்தி முறைக்கும் நிறைய வித்தியாசம் உண்டு என்பதே. அப்படியானால் அந்த வித்தியாசம் என்ன? கருமான் பாத்திரங்கள் செய்கிறானல்லவா? அப்படி அவனால் செய்யப்படும் பாத்திரங்களுக்கு உபயோகிக்கும் தகடு, அது செப்புத் தகடோ, அல்லது பித்தளைத் தகடோ எதுவாயிருந்தாலும்சரி அது அவனுடைய சொந்தம்; மற்று அவன் தானே உழைத்து வேலை செய்து பாத்திரங்களை உற்பத்திசெய்கிறான். இது பிறருடைய வேலைக்காகச் செயயப்படுவதாயினுங்கூட இதில் சுரண்டும் தன்மையில்லையல்லவா?

வியாபாரத்திற்காக சாதாரண முறையில் செய்யப்படும் பொருள் உற்பத்தி முறைக்கும், முதலாளித்துவ முறையில் செய்யப்படும் பொருள் உற்பத்திக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. அதாவது வியாபாரத்திற்காக விவசாயியோ, அல்லது ஒரு கருமானோ சாதாரண முறையில் பொருள் உற்பத்தி செய்கிறார்களென்றால், அவ்விதம் அவர்களால் செய்யப்படும் பொருள் உற்பத்தியானது சிறிய அளவில், அவர்களுடைய சொந்த உழைப்பால், அவர்களுக்குச் சொந்தமான சாமான்களைக்கொண்டு தயாரிக்கப்படுகிறது. ஆனால் முதலாளித்துவ முறையில் பொருள்களை உற்பத்திசெய்வது இதற்கு நேர்மாறான முறையாகும், பெரிய பெரிய தொழிற்சாலைகளிலோ.

மில்களிலோ பொருள்கள் தயாரிக்கப் படுகின்றன. அந்தந்த தொழிற்சாலை களில் கூலி கொடுத்து தொழிலாளி களிடம் வேலைவாங்கப்படுகிறது. அந் தந்த தொழிலாளிகள், மில்களில் எந்த மூலப் பொருள்களைக்கொண்டு செய்பண்டங்களாகத் தயாரிக்கிறார் களோ அந்த மூலப் பொருள்கள் அவர்களுக்குச் சொந்தமில்லை.

இன்று உலகம் பூராவிலும் முதலா ளித்துவமானது பரவி அந்தக்கொள் கையை அடிப்படையாகக்கொண்டு பொருள்கள் உற்பத்திசெய்வதாயிருந் தாலுங்கூட சாதாரணமாக விவசாயி களும், இதர தொழிலாளிகளும் சிறிய அளவில் பொருள்களை உற்பத்தி செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் சுதந்திரமாகத் தொழில் நடத்திவருவதாகவே தோன்றும். அப்படி அவர்கள் சுதந்திரமாயிருந்து தொழிலியற்றிவருவது உண்மைதானா? இல்லை. அவர்களும் சுரண்டலி லிருந்து தப்பவில்லை. உண்மை யென்னவென்றால், வியா பாரத்திற்காகச் சாதாரண முறையில் பொருள்களை உற்பத்திசெய்தாலுஞ் சரி, அல்லது முதலாளித்துவ ரீதியில் பொருள்கள் உற்பத்தி செய்வதாயிருந் தாலுஞ் சரி, இந்த இரண்டு முறை களையும் நாம் துண்டு துண்டாகப் பிரித்துக் குணதோஷங் கூற முற்படு வது, பொருள் உற்பத்தி, விநியோகம் சித்தாந்தத்தையே பாழ்படுத் தியவர்களாவோம். வியாபாரத்திற் காகப் பொருள்களை உற்பத்திசெய்வ தாயிருந்தால் அது சிறிய அளவில் செய்யப்பட்டாலுஞ் சரி நாளடைவில் அது விரிந்து முதலாளித்துவமுறை யிலேதான் கொண்டுபோய்விடும். இதை லெனின் பலதடவை வற் புறுத்தியிருக்கிறார். ஆனதால், பொருள் உற்பத்தி செய்யப்படுவது சிறிய அளவில் இருந்தாலுஞ் சரி, அல்லது பெரிய அளவில் இருந்தா லுஞ் சரி, மனித சமூகத்தின் தேவை யைக் கருதியில்லாமல், மார்க்கெட் டில் விற்று லாபம் சம்பாதிப்பதையே குறியாகக் கொண்டு செய்யப்படுமா னால், உலகத்திலே சுரண்டலும் அதைத் தொடர்ந்து போட்டியும் போராட்டமும் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கும். இதைக் கடவு ளாலுங்கூடத் தடுக்கமுடியாது.

ஜனனம் என்ற கேள்விக்கு, மரணம் என்பதுதான் விடை.

—ஓர் அறிஞன்

——"ஹரிபரன்"

இந்தியக் கைத்தொழில் அபிவிருத்திக்கு இலேசான வழி

உலகத்திலுள்ள தேசங்களின் கைத்தொழிலபிவிருத்தியைப் பற்றிக் கவனிக்கும்போது சில தேசங்கள் மற்றவையைக்காட்டிலும் ஏன் மிகவும் முன்னேறியுள்ளன வென்ப . தெரியவரும். தற்பொழுது குறிப்பிடும்படியாக முன்னேற்ற மடைந்துள்ளவை (1) ஐக்கிய அமெரிக்கா (2) ஜெர்மனி (3) இங்கிலாந்து (4) ஜப்பான் இவைகளாகும்.

மேலே சொல்லிய தேசங்கள் எவ்விதம் கைத்தொழிலே அபிவிருத்தி செய்துகொண்டன வென்பதைப்பற்றிக் கவனிப்போம். இத் துறையில் முன்னணியில் நிற்பது இங்கிலாந்து. நீராவி இயந்திரம் கண்டுபிடித்தது இதற்கு ஒரு தூண்டுகோலாய் ஏற்பட்டது. நிலக்கரி, இரும்பு முதலிய அவசியமான பொருள்கள் ஏராளமாய்க் கிடைப்பது பெரும் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்குச் சாதகமாயிற்று. உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் இங்கிலாந்துக்குச் சரக்குகள் வந்ததால் கப்பல்களின் அவசியம் ஏற்பட்டு காலக்கிரமத்தில் பெரும் கப்பற் படைக்கும் ஏராளமான வியாபாரக் கப்பல்களுக்கும் அதிபதியாக நேர்ந்தது. இவைகளெலாம் நெசவுத் தொழிலுக்கும் தூண்டு கோலாயிருந்தது. இத்தொழிலில் உலகத்திலேயே முதன்மை ஸ்தானத்தை அடைந்தது.

ஜெர்மனியை கைத்தொழி லபிவிருத்தியி லீடுபடச் செய்தது 1870ல் ஏற்பட்ட பிராங்கோ—பிரஷ்யன் யுத்தம். அங்கு ஏராளமாய்க் கிடைக்கக் கூடிய ஒரே மூலப்பொருள் நிலக்கரியானதால், ஜெர்மானியருடைய கைத்தொழி லெல்லாம் அதனை ஆதாரமாகக் கொண்டுள்ளவையே. நிலக்கரியிலிருந்து சாயம், பெட்ரோல், ரப்பர் இன்னும் எத்தனையோ வித சாமான்கள் ரசாயன சாஸ்திரத்தின் உதவியைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றன. ஜெர்மானியரின் ரத்தத்தில் ரசாயன சாஸ்திரம் ஓடுகிறதென்று சொல்லுவது பொருந்தும்.

ஐக்கிய அமெரிக்கா கடைசியாகத்தான் இத்துறையிலிறங்கியது. இஃது இதர தேசங்களிலுள்ள கலைகளைக் கவனித்து அவைகளை அபிவிருத்தி செய்துகொண்டது. அங்கு எண்ணெயும், நிலக்கரி, இரும்பு முதலிய மூலப்பொருள்களும் ஏராளமாய்க் கிடைக்கின்றன. எண்ணெய் உபயோகப்படுத்துவதற்கு மோட்டார் போன்ற இஞ்சின்கள் ஏற்படுத்தப்பட்டன. இத்தொழிலில் அமெரிக்கா முன்னணியில் நிற்கிறது. இன்று உலகத்தில் 4 கோடி மோட்டாருள்ளதில் மூன்று கோடி அமெரிக்காவி லுள்ளதென்று சொல்லப்படுகிறது. அங்கு ஐந்து மனிதர்களுக்கு ஒரு கார் வீதமிருந்து வருகிறதென்றும் அங்குள்ள 12கோடி

மக்களும் கூடுமானால் ஒரே சமயத்தி லேயே போய்வரலாமென்றும் சொல்லப்படுகிறது. மோட்டார் எஞ்சின் செய்வதற்குப் போதிய மூலப் பொருள்கள் கிடைப்பதால் தேசம் பூராவிலுமே குறுக்கும் நெடுக்குமாய் அநேகம் ஸிமெண்டு ரோடுகள் போடப் பட்டுள்ளன. ரயிலை விட மோட்டார் பிரயாணம் லாபகரமாயிருந்து வருவதோடல்லாமல் அங்கு கால்நடையாய்ப் போகிறவர்கள் மிகச் சுருக்கமே.

ஐக்கிய அமெரிக்காவில் 1820ல் 100க்கு 12 பேர் கைத்தொழிலிலும் 72 பேர் விவசாயத்திலும் ஈடுபட்டிருந்தனர். ஆனால் 1930ல் 100க்கு 29 பேர் கைத்தொழிலிலும் 21 பேர் விவசாயத்திலும் ஈடுபடலாயினர். விவசாய அமெரிக்கா கைத்தொழிலமெரிக்காவாக மாறிவிட்டது.

கைத்தொழிலபிவிருத்திக்கு ஆராய்ச்சி அவசியம். ஆராய்ச்சி நடத்துவதற்கோ பொருத்தமான ஆட்கள் தேவை. ஆகவே கைத்தொழிலாரம்பத்தால் ஆராய்ச்சி ஆரம்பமாய் அதன் பயனாய் இளைஞர்களுக்கு வேலை கிடைத்து ஜனங்களின் வாழ்க்கைத் தரம் உயரும். ஆராய்ச்சியின் பயனாகத்தான் மோட்டாரின் விலை 1590 டாலரிலிருந்து 622 டாலருக்கும் ஒரு பவுண்ட் அலுமினியத்தின் விலை 12 டாலரிலிருந்து 22 ஸெண்டுக்கும் குறைந்திருக்கிறது. ஆராய்ச்சியில்லையேல் அநேகம் கைத்தொழில்கள் வளர்ச்சி பெற்றிருக்கா தென்பதோடல்லாமல் ஆரம்பிக்கவே பட்டிராது. ரஸாயன கைத்தொழில்கள், ஆராய்ச்சியாலேயே அபிவிருத்தியடைந்துவருகிறதெனலாம். உணவுப் பொருள்களும் அப்படியே. எந்தத் தொழிலை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். அதில் ஆராய்ச்சியின் அரிய உதவியையும் சக்தியையும் காணலாம்.

ஆசியா தேசங்கள் கைத்தொழில் நாடுகளாகாதென்ற எண்ணமிருந்து வந்தது. ஜப்பான் இந்த எண்ணத்தை மண்ணாக்கிவிட்டது ஜப்பானில் இரும்பு இல்லை என்பதைத்தவிர இதர வகைகளில் இங்கிலாந்தை ஒத்திருக்கிறது. ஜப்பான் நெசவு, ஸிமெண்டு முதலிய இலேசான கைத்தொழில்களில் கவனத்தைச் செலுத்தவாரம்பித்தது. திறமைவாய்ந்த ஜப்பானியர்களை பிறநாடுகளுக்கனுப்பி அவர்கள் தேர்ச்சிபெற்று திரும்பிவந்ததும் அத்தொழிலை ஜப்பானில் ஆரம்பித்துவந்தார்கள். ஆரம்பத்தில் ஜப்பான் மேல்நாடுகளைப் பார்த்துப் படித்துவந்ததென்றாலும் இப்போது ஜப்பானைப் பார்த்துபடிக்கக்கூடிய அநேகவிஷயங்களிருந்து வருகின்றன.

இந்தியாவையெடுத்துக்கொள்வோம். அது 35 கோடி மக்கள் கொண்டதும் ஐக்கிய அமெரிக்கா போன்றோ அல்லது ஐரோப்பிய ரஷ்யா தவிர்த்த ஐரோப்பா போன்றோ விஸ்தீரணமுள்ளதாகும். இந்த 35 கோடி மக்களுக்கும் இங்குள்ள கைத்தொழில்கள் ஜாபஷட்பூரில் இரண்டு இரும்பு எஃகு தொழிற்சாலைகளும் மைசூரிலும் கல்கத்தாவிலுமுள்ள இரண்டு சிறியவைகளுமேயாகும். பெரும் கைத்தொழில்களுக்கு அதிமுக்கியமான இரும்பும் நிலக்கரியும் இங்கு ஏராளமாய்க் கிடைக்கின்றன. பெரும் கைத்

தொழில்களுடன் இயந்திரங்களை ஓட்டுவதற்காகவும், உஷ்ணத்தை உற்பத்தி செய்வதற்கும் மின்சார உற்பத்தியையும் அபிவிருத்தி செய்யவேண்டும். ஆசியாவுக்கே முதலாவதெனச் சொல்லக்கூடிய காவிரித்திட்டத்தை மைசூர் ஆரம்பித்து நீரிலிருந்து மின்சார சக்தியை உற்பத்தி செய்துகொண்டது. இதர நாடுகளும் இத் திட்டங்களை ஆரம்பித்தன. பெரிய நதிகளையும் இமாலயம் போன்ற மகத்தான மலைகளையுங்கொண்ட இந்தியாவில் நீரிலிருந்து மின்சார உற்பத்திசெய்யும் ஸ்தாபனங்களை ஏற்படுத்திக்கொள்ள ஏராளமான வசதியிருக்கிறது.

இந்தியா போன்ற விஸ்தீரணம் படைத்த தேசத்துக்கு மோட்டார் வாகனம் லாபகரமானதும் சௌகர்யமானதுமாகும். கோடிக்கணக்கான டன் ஸிமன்டை உபயோகப்படுத்தக்கூடிய ஸிமண்ட் ரஸ்தாக்களை தேசம் முழுவதிலும் குறுக்கும் நெடுக்கும் ஓடச் செய்யலாம். மோட்டார் இயந்திரசாலைகளை ஏற்படுத்திக்கொள்ள ஏற்ற வசதிகளிருந்து வருகின்றன.

இந்தியாவில் நீராவி இயந்திரங்கள் எவ்வளவோ காலத்திற்கு முந்தி செய்திருக்கவேண்டும். எல்லாவிதமான சௌகர்யங்களையும் கொண்ட எத்தனையோ ரெயில்வே தொழிற்சாலைகளிருக்கும்பொழுது இது ஒரு கஷ்டமான காரியமல்ல.

ஏராளமான நெசவுத் தொழிற்சாலைகளிருந்துவரினும் அவைகளுக்கு உபயோகமாகும் சாயங்களுக்கு இதர நாடுகளை எதிர்பார்த்து நிற்கிறது. இந்தியர் சாயம் உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகளை இந்தியாவிலேற்படுத்திக்கொள்ளும்பட்சத்தில் இத்துறையிலபிவிருத்தியடைய மார்க்கமிருப்பதோடு நெசவுத்தொழிலுக்கும் உதவியாயிருக்கும்.

முக்கியமாகச் செய்யவேண்டியது யாதெனில தேசம் பூராவையுமே சர்ச்சை செய்து என்னென்ன மூலப்பொருள்கள் கிடைக்கக்கூடுமென்பதையும் என்னென்ன கைத்தொழில்கள் ஆரம்பிக்கலாமென்பதையும் ஆராய்ச்சி செய்யவேண்டும். பின் அவ்விதக் கைத்தொழில்களில் தேர்ச்சி பெறுவதற்கு நூற்றுக் கணக்கான இளைஞர்களை பிறநாடுகளுக்கு அனுப்பவேண்டும். ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு முதல் முதலாக வேண்டியது தேர்ச்சிபெற்ற சொந்த ஆள். ஆரம்பத்தில் அன்னிய நாட்டு நிபுணர்கள் இருந்து அவருடன் நம்மவர்களுமிருந்துவரலாம். பிறநாடுகளுக்குச் சென்று தேர்ச்சிபெறுவதும இலேசானதல்ல. ஜப்பான் ரேனுடுகளைப் பார்த்துச் சாயான்களை உற்பத்தி செய்து அவர்களுடைய வியாபாரத்தைப் பாதிக்கச்செய்திருப்பது இவ்விதக் கஷ்டத்தை உண்டுபண்ணியுள்ளது. நேஷனல் சப்கமிட்டி அமைத்து இந்தியாவைக் கைத்தொழில நாடாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது நம்பிக்கை தரக்கூடியதாயிருக்கிறது.

இந்தியாவில் அறிவுக்குக் குறைவு கிடையாது. திட்டமும், தலைமையும், அதிகாரிகளின் ஆதரவுமே தேவையாக இருந்துவருகிறது.

—மா. சர்மா, B. A., (Hons.)

சிலப்பதிகாரம்-வேட்டுவ வரி

கொற்றவை கோவில்:

சுரபுன்னையும், நரந்தையும் மணம் வீசும் மலர்களை நிரல்படப் பூத்திருக்கின்றன. ஆச்சாவும் சந்தனமும் தம் உயர்ந்த கிளைகள் முழுவதும் மலர்களால் மூடப்பெற்று இருக்கின்றன. சேமரமும், மாமரமும் செறிந்த புஷ்பங்களை உடையனவாய்ப் பொலிவுற்று விளங்குகின்றன.

வேங்கை மரத்தின் பூக்கள் தரையில் உதிர்ந்து கிடக்கின்றன. இலவ மரங்களது செவ்விதழ்களும், பொரி போன்ற வெண்மையான புங்கமரத்தின் புஷ்பங்களும் தரையில் சிந்திக் கிடக்கின்றன. வேங்கை மலர்களும், இலவமரத்தின் இதழ்களும், புங்கமரத்தின் புஷ்பங்களும், தரையில் சிதறி ஒன்றோடொன்று கலந்து இருப்பது செம்பொன்னையும் வெள்ளியையும் சேர்த்து சிதறி வைத்தாற் போல் கண்களைக் கவரும் காக்ஷி அளிக்கின்றது.

வெண்கடம்பு, பாதிரி, புன்னை, குரா, கோங்கு, முதலிய மரங்களும், மணங் கமழும் மலர்கள் மல்கிக் கிடக்கின்றன. அவற்றின் தேனை உண்ண வந்த வண்டுகள் கூட்டங் கூட்டமாய் மரக்கிளைகளைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. அவை செய்யும் சப்தம் யாழோசை போல் இனிமை பயப்பதாய் இருக்கின்றது.

அது வரண்ட நிலப்பரப்பு. எங்கோ ஒரு இடத்தில் சில குடிசைகள் கொண்ட கிராமத்தைக் காணலாம். மனிதனும், தாவரமும் வாழ்வதற்கும், தழைப்பதற்கும் அரிய அந்நிலப் பரப்பின் மத்தியில் கொற்றவையின் கோயில் அமைந்திருக்கிறது. அதைச் சூழ்ந்து பலவர்ணங்களும் மணமும், தேனும் நிரம்பிய பூக்களைக் கொண்ட மரங்கள் செழித்து வளர்ந்திருப்பது, கொற்றவையின் தெய்விகத் தன்மையை வெளிப்படுத்திக் காட்டுவது போல் இருக்கின்றது.

சாலினி தெய்வமுற்றது:

அக் கோயிலின் சிறு தொலையில் சில குடிசைகள் தென்படுகின்றன. அது ஒரு வேட்டுவக் கிராமம். அதிலிருப்போர் எல்லாம் வேடர்களே. வரண்ட நிலப்பரப் பாகையால் அவர்கள் வில்லால் சீவனம் செய்யும் வாழ்க்கை யுடையவர்கள். வழிப்பறி கொள்வது அவர்கள் முக்கியமான தொழில். வீரத்தில் இணையற்றவர்கள். அவர்களுள் யாரும் நோய் வாய்ப்பட்டு இறப்பதே கிடையாது. பகைவர்கள் வாளால் வெட்டுப்பட்டு இறப்பதுதான் உயிர் ஒழியும் ஒரே மார்க்கம் எனக் கூறுவார்கள்.

"இட்டுத் தலையெண்ணும்
எயினர் அல்லது
சுட்டுத் தலை போகாத் தொல்குடி."

வீரத்தினால் சிறந்து விளங்கிய குடியில் தோன்றியவள் சாலினி. அவள் மேல்தான் கொற்றவை எப்பொழு

தும் ஆவேச மூலமாய் வெளிப்படு வாள், அச் சாலினி தெய்வ முற் றாள். அவள் மயிர்கள் சிலிர்த்தன. கைகளைக் கொட்டிக் கொக்கரித்தாள், ஊர் நடுவேயுள்ள மன்றத்தில் ஆடத் தொடங்கினாள்.

தெய்வ வழிப்பாடு வேட்டுவர் ஊரில் ஒரு விசேஷ நிகழ்ச்சி. அவர்கள் கொற்றவை தங்களுக்குக் கூறவேண் டிய எல்லாவற்றையும், சாலினி மூலம் ஆவேசமாய் வந்து கூறுவாள் என்ற நம்பிக்கை கொண்டவர்கள். ஆகவே சாலினி தெய்வமுற்றதும் வேடர் எல்லோரும் வந்து கூடிவிட் டனர். அவள் ஆட்டம் வேடருக்கு வியப்பைத் தந்தது. அவள் என்ன சொல்லப் போகிறாளோ என்ற பய மும் வேடர்களுக்கு இடையிடையே தோன்றிற்று.

சாலினி கூற்று:

வியப்பும் பயமும் ஒருங்கே கொண்ட வேடர்களை நோக்கி "வலி பொருந்திய வில்லையுடைய வேடர் கள் கொட்டில்கள் பாழடைந்துவிட் டன. பகைவர் ஊரிலுள்ள கொட்டில் கள் பசுக்கள் நிறைந்திருக்கின்றன. வழிப்பறி முதலியவற்றால் வரும் வள மும் குறைந்துவிட்டது. வேடர்கள் பலங்குன்றி அறக்குடிகள்போல் ஆகி விட்டனர். இவையெல்லாம் கொற்ற வைக்குக் கொடுக்கவேண்டிய கடனைக் கொடாமையால் ஏற்பட்டவை" என்று சாலினி கூறினாள்.

"கல்லென் பேரூர்க்
கணநிரை சிறந்தன
வல்வில் எயினர்
மன்றுபாழ் பட்டன
மறக்குடித் தாயத்து
வழிவளஞ் சுரவாது
அறக்குடி போலவிந்து
அடங்கினர் எயினர்."

சாலினி கூறியது அவ்வளவும் உண்மை. அவர்கள் தரித்திர தசையில் இருக்கிறார்கள். கொற்றவைக்குக் கடன்கொடாத பிழையையும் உணர்ந் தார்கள். ஆனால் கொற்றவை அவர் களைக் கோபித்துக் கொள்ளாதது அவர்களுக்குச் சிறிது மகிழ்ச்சி தந்தது. அப்பொழுது சாலினி, "கடன் கொடுத்தால் ஒழிய கலை மானை ஊர்ந்து செல்லும் செல்வி உங் களுக்கு வெற்றி தரமாட்டாள். கள்ளை உண்டு காலத்தைக் கழிக்கும் சந் தோஷ வாழ்க்கையில் விருப்பமிருந் தால் உடனே செலுத்தவேண்டிய கடனைச் செலுத்துங்கள்" என்று அறி வுறுத்தியது வேடர்களுக்கு அச் சத்தை விளைவித்தது.

"கலையமர் செல்வி
கடனுணின் அல்லது
சிலையமர் வென்றி
கொடுப்போள் அல்லள்
மட்டுண் வாழ்க்கை
வேண்டுதிர் ஆயின்
கட்டுண் மாக்கள்
கடன்தரும்........"

கொற்றவை கோபம் கொள்ளா திருக்க அவளுக்குப் பூசை போடத் தீர்மானித்தனர். காலந் தாழ்த்தாமல் காரியங்களைச் செய்தனர்.

அலங்காரம்:

தெய்வமுற்ற தேவராட்டிக்குத் தெய்வக் கோலஞ் செய்தனர்.

அவள் கூந்தலைச் சடையாகக் கட்டி அதைச் சுற்றிப் பாம்புக்குப் பதில் பொன் நாணைக் கட்டினர். தோட்டப் பயிரை அழிக்கவந்த காட்டுப் பன்றியைக் கொன்று பெற்ற அதன் கொம்பைச் சடையின்மேல் சந்திரனை உருவகிக்கச் சாத்தினார்கள். புலியின் வாயைக் கிழித்து உதிர்த்த பற்களைக் கோத்துத் தாலியாகக் கட்டினர். அப் புலியின் தோலை மேலாடையாக உடுத்தினர். வில்லை வளைத்து அவள் கையில் கொடுத்துப்பின், கலைமான் ஒன்றின் மேல் ஏற்றினர். பொம்மை, கிளி, காட்டுக்கோழி, மயில், பந்து, கழங்கு முதலியவைகளைக் கொடுத்துச் சேவித்தனர்.

கோயிலுக்குச் சென்றது:

வழிப்பறி செய்யும்போது கொட்டும் பறை ஒலி ஒருபுறம். சூறை கொள்ளும்போது ஊதும் சின்னத்தின் ஒலி ஒருபுறம். குழல், கோடு, சங்கு முதலியவற்றின் ஒலி ஒருபுறம். இவ் வொலிகளைச் செய்வாரின் பின் தேவராட்டியும் வேடரும் வருகின்றனர். அவர்களுக்கும் பின்னால், வண்ணம், சந்தனம், அவரை முதலியவற்றின் புழுக்கல், எள்ளுருண்டை, நிணச்சோறு இவைகளை ஏந்தி வரும் ஏவல் செய்யும் வேடரும் வேட்டுவச்சிகளும் வருகிறார்கள். இவ் வூர்வலம் கொற்றவை கோயிலின் முன் வந்து சேர்ந்தது. கொற்றவையின் காணிக்கைகளை வேடர் பலி பீடத்தின்முன் விரிசையாய்ப் பரப்பி வணங்கினார்கள். இச் சமயத்தில் அக் கோவிலில் இளைப்பாறத் தங்கிய கவுந்தி, கண்ணகி கோவலன் மூவரும் இவ் வேடிக்கைகளைப் பார்க்க வந்தனர்.

சாலினி ஜோஸ்யம்:

கண்ணகியைப் பார்த்த சாலினி தெய்வமுற்றுக் கூறினாள்: இவள் கொங்க நாடு, குட நாடு, தென் தமிழ் நாடு இம் மூன்றையும் ஆளுஞ் செல்வி. இவ் வாட்சியை நடத்தவே முற்பிறப் பிற் செய்த தவத்தின் கொழுந்தாய் இப் பிறவி எடுத்தாள். இவ் வுலகுக்கே முழு மாணிக்கத்தைப்போல் பெருமை தரும் பெண்ணுருவுகொண்ட ஒரு தெய்வீகமும் அழகும் பொருந்திய மாணிக்கம் இவள்.''

''இவளோ, கொங்கச் செல்வி
குடமலை யாட்டி
தென் தமிழ்ப் பாவை
செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியாய்
உலகிற்கு ஓங்கிய
திருமா மணியெனத்
தெய்வமுற்று உரைப்ப''

இப்படிப் புகழ்ந்தது கண்ணகிக்குப் பிடிக்கவில்லை. தெய்வ மயக்கத்தால் சாலினி கூறினாள் என்று கொண்டு நாணத்தால் கோவலன் முதுகின்புறம் ஒதுங்கி, மறைவில் புன்முறுவல் பூத்தாள்.

கொற்றவை:

"மாலும் அயனும் தொழுந் தோன்றியவள் கொற்றவை. மதியைச் சூடும் சென்னியள். நுதலைத் திறந்து விழித்த நெற்றிக் கண்ணையுடையவள். பவளம்போன்ற சிவந்த வாயினையும்,

வெள்ளிய நகையினையும், நஞ்சுண்டதால் கருத்த கழுத்தும் கொண்டவள். வாசுகியை நாணாகப் பூட்டி மேரு மலையை வில்லாக வளைத்தவள். வளையலணிந்த அவள் கைகளில் சூலம் விளங்குகின்றது. புலியின் தோலை மேகலையாகவும், யானையின் தோலை போர்வையாகவும் உடுத்திருக்கிறாள். அவள் இடக்காலில் சிலம்பும், வலக்காலில் வீரக் கழலும் ஒலிக்கும். வாள் வீச்சில் வாய்ப்புப் பெற்றவள். மனித வுடம்பும், எருமைத் தலையும் உடைய மகிஷாசுரனைக் கொன்று, அவன் தலையின்மேல் வெற்றியுடன் ஏறி நின்றவள். தேவராலும் முனிவராலும் வணங்கப்படுபவள். அழியாதவள். மகாவிஷ்ணுவுக்கு இளையவள். என்றும் கன்னிக் கோலத்தில் காக்ஷி தருபவள். அவள் சாலினி கொண்ட கோலமும், வேடுவர் தந்த வரிசையும் வாய்ப்புடையவை என அருளினாள். அவள் அருள் பெற்றதும் வேடர் மகிழ்ச்சி கொண்டனர்.

"இறைவியின் கோலத்தைக் கொண்ட இச் சாலினி முற் பிறப்பில் செய்த தவம் எப்படிப்பட்டதோ! இவள் பிறந்த குடியிற் பிறந்த வேடர்கள் குலமே சிறந்த குலம்!" என்று சாலினியின் கோலத்தின் பெருமையையும், அவள் குலத்துதித்த தங்கள் மதிப்பையும் வேடர் வியந்து கொண்டாடினார்கள்.

பின் தங்களுக்கு அருள் செய்த கொற்றவையை நோக்கி 'தேவர்களும்' வணங்க, வேதத்திற்கு எட்டாது, ஆனால் ஞானிகளின் மனதில் எழுந்தருளும் செல்வியே! இவ்வளவு சிறப்புடைய நீ புலித் தோலை யுடுத்திக் காட்டில் எருமையின்மேல் ஏறி நின்றாய். இது என்ன மாயம்" என்றும், "அரி, அரன், அயன் இவர்களின் இதய கமலத்தில் வீற்றிருக்கும் விரிந்த கதிர்களுடைய விளக்கே! நீ வளையலணிந்த கைகளிலே வாளையேந்தி, மகிஷாசுரனைக் கொன்று முருக்கிய கொம்புகளையுடைய கலைமானின்மீது நிற்கின்றாய். இது என்ன மாயமோ?" என்றும் "கங்கையைச் சடைமுடியில் அணிந்த சிவனுடைய இடப்பக்கத்தில் தங்கும் இறைவியே! மறைகள் துதிக்க அவைகளுக்கும் தோன்றாமல் நிற்பவளே! சங்கு சக்கரங்களைக் கையிலேந்தி சிவந்த கண்களுடைய சிங்கத்தின்மேல் ஏறி நின்றாய். இது என்ன மாயமோ?" என்றும், வேதத்தையுங் கடந்து நிற்கும் பாவை அடியார்க்கு எளியாளாய் பல்வேறுருவிற் காட்சி யளிக்கும் பரிசை வியந்து அவளைப் போற்றினர்.

கூத்து:

போற்றிய பின், முன் கொற்றவை கொன்றை மலரையு . துளபத்தையும் கலந்து தொடுத்த மாலையை உத்தரீயமாகக் கொண்டு அசுரர் போரில் மடியும்படி அமரருக்கு ஆடிய கூத்தையாட உட்பட்டனர். அழகிய பொன்னாற் செய்த அரிபொருந்திய சிலம்பும், சூடகமும் மேகலையும் ஒலிக்கின்றன. கொற்றவை வஞ்சனையால் போர்செய்யும் வாட்படையையுடைய அசுரர் மடியும்படி, மரக்கால் மேல் நின்று வாட்கூத்தை ஆடுகிறாள். அமரர் செல்வி தங்கள் பொருட்டு ஆடுவதால் அவள் காயா மலர் மேனி மறைய

ஆகாயத்தினின்றும் புஷ்பமாரி பொழிகின்றனர்.

ஆய்பொன் அரிச்சிலம்பும் சூடகமும்
மேகலையும் ஆர்ப்ப ஆர்ப்ப
மாயஞ்செய் வாளவுணர் வீழநங்கை
மரக்கான்மேல் வாளமலை யாடும்
போலு
மாயஞ்செய் வாளவுணர் வீழ நங்கை
மரக்கான்மேல் வாளமலை யாடு
மாயின்
காயாமலர் மேனி யேத்தி வானோர்
கைபெய் மலர் மாரி காட்டும்
போலும்.

கோற்றவை நிலை:

முன் 'அசுரர் வாட அமரர்க்காடியதுபோல' கொற்றவை தன்னை ஏத்திப் பலி கொடுக்கும் வேடர்க்கும் வென்றியைத் தருகிறாள்.

பகைவருக்குப் பயத்தைத் தரும் சிற்றூரில் உள்ள தனக்கிணையில்லாத வேட்டுவ வீரன், வேற்றூரினுள்ள பசுக்களைக் கவரச் செல்கிறான். அவ்வீரனுக்கு வெட்சி மாலையை அணிவிப்பவள் கொற்றவைதான். அவளும் அவனுக்குத் துணையாய்ப் போவதால் காட்டிலிருக்கும் காரியென்னும் பக்ஷி, அவர்களுக்கு வரும் கேட்டை தன் குரலால் முன்னாலேயே அறிவிக்கும்.

கள் விற்பவள் ஒருத்திப் பழங்கடன் கொடுக்காததால், ஒருவனுக்கு கள் கொடுக்க மறுத்துவிட்டாள். அது வேடனுக்குப் பொறுக்கவில்லை. அப்பொழுதே வில்லைக் கையில் ஏந்தினான். பக்ஷி சகுனமும் அவனுக்கு அனுகூலமாயிருந்தது. பகைவர் பசுக்களைக் கவரச்சென்றான். அவன் செல்லும்போது அவனுக்கு முன்னால் தன்னுடைய சிங்கக் கொடியை பிடித்துக் கொண்டு போகிறவள் கொற்றவையல்லவா?

கள்விலை யாட்டி மறுப்பப்
பெருமறவன் கையில் ஏந்திப்
புள்ளும் வழிப்படரப் புல்லார்
நிரைகருதிப் போகும் போலும்
புள்ளும் வழிப்படரப் புல்லார்
நிரை கருதிப் போகும் காலைக்
கொள்ளும் கொடியெடுத்துக் கொற்றவையும்
கொடுமரமுன் செல்லும் போலும்.

கோடை:

வேற்றூரிலிருந்து கவர்ந்து வந்த பசுக்களை வேடர்கள் தமக்கே வைத்துக்கொள்வதில்லை. அவர்களுக்கு வேல் வடித்துக்கொடுக்கும் கொல்லன், துடிகொட்டும் புலையன், அவர்களை மகிழ்விக்கப் பாடல்களைப் பாடும் யாழ்ப்பாணன் முதலியவர்களுக்குக் கொடுக்கின்றனர்.

இளமா வெயிற்றி
இவை காணின் ஐயர்
தலைநாளை வேட்டகத்துத்
தந்தநல் ஆனிரைகள்
கொல்லன் துடியன்
கொளைபுணர் சீர்வல்ல
நல்லியாழ்ப் பாணர்தம்
முன்றில் நிறைந்தன.

இப்படி வேட்டுவர் தாம் கவர்ந்து வரும் பசுக்களை தமக்குத் தொழில்

செய்து உதவும் மற்றவர்க்கும் கொடுப்பதை கொற்றவைக்குக் கூறுகின்றனர். 'இளமாவெயிற்றி இவைகாண்' என்று சொல்லுகையில், "நாங்கள் கவரும் பசுக்களை எல்லோர்க்கும் பிரித்துக் கொடுக்கிறோம். ஆகவே நாங்கள் செய்வது அடாத செயலேனும் அது மற்றவர்க்கும் பயன்படுவதால் எங்களுக்கு மேலும் மேலும் வெற்றியைக் கொடு என்று கொற்றவையை வேண்டிக் கொள்வதுபோல் தொனிக்கிறது.

கொற்றவை வேட்டுவர் செய்யும் திருட்டுத் தொழிலுக்கு உடந்தையாக இருப்பாளா? அதை வேடர்களே உணர்ந்துதான் தாம் பாகம் கொடுப்பதைக் கூறுகின்றனர். அவர்கள் கொல்லனுக்கும், துடியனுக்கும் கொடுப்பது வேலைக்குக் கூலிதானே! அது சிறந்த கொடையாகாது. மற்றவர்க்குச் செய்த உதவியுமாகாது. ஆகவே கொற்றவை வெற்றிதர மறுக்கலாமல்லவா? இதை உட்கொண்டு தான் அவர்கள்

"கயமலர் உண்கண்ணாய்
காணாய் நின் ஐயர்
அயலூர் அலற
எறிந்தநல் ஆனிரைகள்
நயனில் மொழியின்
நரைமுது தாடி
எயினர் எயிற்றியர்
முன்றில் நிறைந்தன"

என்று மேலும் கூறுகின்றனர். வேடர் ஊரில் வசிக்கும் நரைத்த தாடியையுடைய முதிர்ந்த வேட்டுவக் கிழவர், கிழ வேட்டுவச்சிகள் இவர்களுக்கும் பங்கு கொடுக்கிறார்களாம். இக் காரணங்களுக்காகமட்டும் கொற்றவை வெற்றி தருவாளா?

பலி.

"சூரியன் கதிர்களின் வெப்பம் உயிர்களை வருத்தாமல் இருக்க அவற்றைத் தாங்கிச் செல்லும் ரிஷிகளையும், தேவர்களையும் ஒரு கெடுதலும் அவர்களுக்கு வாராமல் காப்பவளே! நின் பாதங்களைத் தொழுகிறோம். கொலையையும் வலியையுமுடைய வேடர் நீ அவருக்குக் கொடுக்கும் வெற்றிக்காக, முன் உன் முன்னே வணங்கி ஏற்றுக் கொண்ட பிரதிக்ஞைப்படி, கழுத்திலிருந்து விழும் ரத்தமாகிய பலியை ஏற்றுக்கொள்வாய்" என்று வேண்டிக் கொள்கின்றனர்.

"சுடரொடு திரிதரும்
முனிவரும் அமரரும்
இடர்கெட அருளுநின்
இணையடி தொழுதேம்
அடல்வலி எயினர்நின்
அடிதொடு கடனிது
மிடறுகு குருதிகொள்
விறல்தரு விலையே"

இது நரபலி. கொற்றவைக்கு வேடர் நரபலி கொடுப்பதும் வழக்கம், இதைச் சயங்கொண்டாரும் தம் பரணியில் எடுத்துக் கூறுகின்றார்.

அடிக்கழுத்தில் நெடுஞ்சிரத்தை
அரிவ ராலோ
அரிந்தசிரம் அணங்கின்கைக்
கொடுப்ப ராலோ

கொடுத்தசிரம் கொற்றவையைப்
பரவு மாலோ
குறையுடனும் கும்பிட்டு
நிற்கு மாலோ."

கலிங்கத்துப் பரணி.

நரபலியோடு, திணைச் சோறு முதலியவைகளையும் படைத்தனர். இவ்வளவும் கொற்றவை அவர்களுக்கு வெற்றி கொடுப்பதற்கு மட்டும் அன்று.

வேண்டுகோள்:

வம்பலர் பல்கி
வழியும் வளம்பட
அம்புடை வல்வில்
எயின்கடன் உண்குவாய்
சங்கரி யந்தரி
நீலி சடாமுடிச்
செங்கண் அரவு
பிறையுடன் சேர்த்துவாய்"

"சந்திரனோடு பாம்பையும் அணியாக முடியிலே அணிந்தவளே! சங்கரி! வழிப்போவார் மிக வேண்டும். அவர்களைக் கொள்ளை யடிப்பதால் வரும் பொருளும் மிக வேண்டும். இவற்றை அருள்புரிய எங்கள் பலிக் கடனை உண்பாய்" என்று வேண்டிக் கொள்கின்றனர்.

வேடர் கூத்து முடிந்தது. கண்ணகி முதலியோருக்கும் கூத்தைக் கவனித்ததில் வழிவந்த வருத்தம் நீங்கியது. சாலினி, கண்ணகி குடநாடு தென் தமிழ் நாட்டுக்கு, ஏன் தமிழ்நாடு முழுமைக்குமே பெருமை தருவாள் என்று கூறினாள். அவள் தெய்வ முற்றுக் கூறிய வாக்கு பலிக்குமா?

நீ பலவேலைகளைச் செய்யலாம். உன்னுடைய வாழ்க்கையில் பல பொருள்களை நீ சந்தித்திருக்கலாம். அந்த வேலைகளும், பொருள்களும் நீ முன்னுக்கு வருவதற்கு எவ்வளவு தூரம் உதவி செய்திருக்கின்றன என்று திரும்பிப் பார்த்தாயா? கடினமான போராட்டமே அறிவாளிகள் முன்னுக்கு வருவதற்கு சாதனமாயிருக்கிறது.

—ஒரு தலைவன்.

—"ஒரு காங்கிரஸ்வாதி"

பண்டித மோதிலால் நேரு

ஜனனம் 1861
மரணம் 1931

நாற்பத்து மூன்றுவது காங்கிரஸ் தலைவர்

"தெரிகிறது; நான் எதோடு போராடவேண்டியிருக்கிறது என்பது இப்பொழுது எனக்கு நன்றாகத் தெரிகிறது."

இவை, பண்டித மோதிலால் நேருவின் போட்டோப்படத்தை உற்றுப் பார்த்துக்கொண்டே, அவருடையமுக வாய்க் கட்டையைப்பற்றி மகாத்மா காந்தியடிகள் சொன்னவார்த்தைகள்.

1861ம் வருஷம் மே மாதம் 6ந் தேதி டில்லியில் பண்டித மோதிலால் நேரு பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் கங்காதர நேரு. பண்டித மோதிலால் கர்ப்பத்தி லிருக்கும் போதே அவருடைய தகப்பனார் காலமாகிவிட்டார். தகப்பனாருடைய தரிசனப் பாக்கிய மில்லாத மோதிலால், தன்னுடைய தமையனார் நந்தலால் நேருவினுடைய போஷணையில் வளர்ந்தார். மோதிலால் தன்னுடைய 12வயதுவரை இஸ்லாமியப் பள்ளியில், பாரசீகப் பாஷையும் அரபு பாஷையும் கற்றார். 1873ம் வருஷத்தில் கான்பூர் சர்க்கார் ஸ்கூலில் சேர்ந்து 1879ம் வருஷத்தில் இன்டர்மீடியட் பரீட்சையில் தேறி, இப்பால் பிரயாகை (அலகாபாத்) மியோர் காலேஜில் சேர்ந்து வாசித்தார். 1882ம் வருஷத்தில் வக்கீல் பரீட்சையில் தேறி தன்னுடைய 22வயதில் கான்பூரில் வக்கீல் தொழிலை ஆரம்பித்தார். இவருடைய தமையனார் நந்தலால் அலகாபாத்தில் வக்கீலா யிருந்தார். ஆனதால், மோதிலாலும் 1886ம் வருஷம் அலகாபாத்துக்கு வந்து தன்னுடைய தமயனாருடன் சேர்ந்து வக்கீல் தொழில் நடத்தினார். இவர் வக்கீல் தொழிலில் அதிக சீக்கிரத்திலேயே பிரபல மடைந்து விட்டது அதிசயமானதுதான். ஜட்ஜுகளுங்கூட இவருடைய வாக்குத் திறமையையும், விஷயத்தை யெடுத்துச் சொல்லும் சாமர்த்தியத்தையுங் கண்டு பலபடப் புகழ்ந்திருக்கின்றனர். பத்திரிகைகளும் இவரைப்பற்றி சர்ச்சை செய்து இவருடைய சாதுர்

யத்தை வியந்திருக்கின்றனர். இவர் அலகாபாத்துக்கு வந்த கொஞ்சகாலத்திற்குள்ளேயே ஒரு பங்களா வாங்கினார். இதற்கு ஆனந்தபவனம் என்று பெயர். இதுவே பின்னே சுயராஜ்யபவனமாகப் பிரகாசித்துக் கொண்டிருப்பது வாசகர்கள் தெரிந்ததே.

1888ம் வருஷம் சர், ஜார்ஜ் யூலினுடைய தலைமையில் காங்கிரஸ் மகாசபையின் நான்காவது கூட்டம் கூடிற்று. முதன் முதல், காங்கிரஸ் மகாசபையின் இந்தக் கூட்டத்திலே தான் பண்டிதர் கலந்து கொண்டார். இப்பால் 1892ம் வருஷம் அலகாபாத்தில் கூடிய காங்கிரஸ் மகாசபையின் கூட்டத்தின் வரவேற்புக் கமிட்டித் தலைவராக இவர் தெரிந்தெடுக்கப் பட்டார். 1903ம் வருஷம் பாம்பேயில் நடைபெற்ற காங்கிரசுக்கு இவர் தனது புத்திரர் பண்டித ஜவஹர்லாலுடன் சென்றிருந்தார். காங்கிரசை யார் கைப்பற்றுவது என்ற போராட்டம் 1906ம் வருஷம் நடைபெற்றதல்லவா? தீவிர வாதிகள், மிதவாதிகள் ஆக இரு கோஷ்டிகளுக்கும் காங்கிரசுக்குள் பெரிய போராட்டம் நடை பெற்றது. அப்பொழுதைய காங்கிரசில் மிதவாதிகளுக்குத்தான் அசைக்கமுடியாத செல்வாக் கிருந்தது. இருந்தாலும் 1906ம் வருஷம் தீவிர வாதிகள் காங்கிரசைக் கைப்பற்றிக் கொள்வார்களோ வென மிதவாதிகள் திகைத்தனர். ஆனால் பண்டித மோதிலால் நேரு மிதவாதிகளுடன் சேர்ந்து அவர்களை விட்டுக் காங்கிரஸ் போய்விடாதபடி காப்பாற்றினார். சட்டத்தை மீறுவது, அந்நிய சாமான் பகிஷ்காரம் இந்த வேலைத் திட்ட மெல்லாம் அப்பொழுது இவருக்குப் பிடிப்பதில்லை. 1907ம் வருஷத்திலிருந்து 1913ம் வருஷம் வரை இவர் ஐக்கிய மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராயிருந்தார். சமூகசீர் திருத்தங்களில் ஆவலுள்ளவர் மோதிலால்நேரு.

"லீடர்" என்ற பத்திரிகையை ஆங்கிலம் படித்த நண்பர்கள் அறிவார்கள். இது அலகாபாத்தில் நடைபெறுவது. இன்றுங்கூட அது மிதவாதப் பத்திரிகையாயிருந்தபோதிலும் அதனுடைய அபிப்பிராயத்தைக் கூர்ந்து கவனிப்பது வழக்கம். தன்னுடைய சில நண்பர்களின் கூட்டுறவோடு 1909ம் வருஷம் பண்டித மோதிலால் நேரு இந்த லீடர் பத்திரிகையை ஆரம்பித்தார். 1910ம் வருஷம் சர்க்கார் லீடர் பத்திரிகையின்மீது நடவடிக்கை யெடுத்துக் கொண்டது. அப்போது மோதிலால் என்ன கூறினார் தெரியுமா? "என்னுடைய வீட்டில் ஒரு செங்கல் இருக்கும்வரை லீடர் பத்திரிகையின் சுதந்திரத்தை வற்புறுத்தும் அதிகாரத்திற்காக நான் சண்டை போடுவேன்" என்று தெரிவித்தார். பின்னே, அபிப்பிராய பேதத்தின் காரணமாக லீடர் பத்திரிகையின் தொடர்பிலிருந்து அறவே விலகிக்கொண்டார்.

1909ம் வருஷம் இவர் ஐக்கிய மாகாண சட்டசபை மெம்பரானார். மாண்ட்போர்ட் சீர்திருத்தம் நமது தேசத்திற்கு நல்கப்பட்டதல்லவா 1918ம் வருஷத்தில். அந்தச்சீர்திருத்தத்தை மோதிலால் மும்முரமாக எதிர்த்தார். அதுமட்டுமா? சுதந்திரத்தைப்பற்றிய தன்னுடைய அபிப்பிரா

யத்தையும் வெளியிட்டார். ஹோம் ரூல் கிளர்ச்சியில் முழுமனதோடு கலந்துகொள்வதில் பின்தங்கவில்லை. ஹோம்ரூல் கிளர்ச்சிக் காலத்தில், இவரை ஹோம் ரூல் இயக்கத்தின் தளபதி யென்று பயோனியர் பத்திரிகை எழுதுவது வழக்க, 1918ம் வருஷம் பிப்ரவரி மாதம் 5ந் தேதி "இன்டிபென்டென்ட்" என்ற ஆங்கில தினசரிப் பத்திரிகையைத் தொடங்கினார். இன்டிபென்டென்ட்டுக்கு அந்தக்காலத்தில் நல்ல செல்வாக்கு. பயமற்ற அபிப்பிராயங்களை அந்தப் பத்திரிகையில்தான் படிக்கலாம். சர்க்கார் அச்சாபீசை ஜப்தி செய்தார்கள். அவ்விதம் ஜப்தி செய்த காலத்தில், கையினால் எழுதி பத்திரிகை வெளி வந்தது.

கஷ்டங்களும் துன்பங்களும் மனிதனை முன்னுக்குக் கொண்டுவருகின்றன என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். கஷ்டத்தைக் கண்ட கோழை கலங்கிவிடுகிறான். அவனுடைய இதயம் இடிந்துவிடுகிறது. ஆனால் வீரனோ கஷ்டங்களையும் துன்பங்களையும் எதிர்நோக்கிச் சென்று வெற்றியை அடைகிறான். நம்முடைய இந்தியாவுக்கு 1919ம் வருஷம் ஒரு கஷ்டமான, துன்பம் நிறைந்த வருஷம். அது நல்ல காலமாகவும் இருந்ததல்லவா? நாம் நம்மை அந்தர்முகமாகப் பார்க்கத் தொடங்கியது அந்த வருஷத்திலிருந்துதான். நம்முடைய கதியற்ற தன்மையை உணர்த்தியது அந்த வருஷத்தில் நடைபெற்ற சம்பவங்கள்தான். பஞ்சாப் ஜாலியன்வாலா பார்க்கின் பெயர் தேசமெங்கும் ஒலித்தது அந்த வருஷத்திலேதானே. ஒத்துழையா இயக்கம் இந்த வருஷத்திலேதான் ஆரம்பிக்கப்பட்டது. மிதவாதியாயிருந்த மோதிலாலின் மனம் மாறியது. தீவிரவாதியாகிவிட்டார். இவருடைய சேவையில் உள்ளம் பூரித்த இந்திய மக்கள் அவ் வருஷத்தில் அம்ருதசரசில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபையின் தலைவராகத் தெரிந்தெடுத்துக் கௌரவித்தார்கள்.

ஒத்துழையாத் திட்டமானது ஆரம்பத்தில் மோதிலாலுடைய மனதைக் கவர்ந்துவிடவில்லை. அதை இவர் எதிர்த்தார். ஆனால் பின்னே இவருடைய மனம் மாறிவிட்டது. மனம் மட்டுந்தான் மாறியதென்று நினைக்கிறீர்களா? இல்லை. தன்னுடைய வாழ்க்கையையே அடியோடு மாற்றிக்கொண்டார். லட்சக் கணக்கில் சம்பாதிக்கக்கூடிய தன்னுடைய வக்கீல் தொழிலைத் தியாகம் செய்தார். சுகபோகமான ஆடம்பர வாழ்க்கையை அறவே விடுத்தார். மேனாட்டுப் போதை வஸ்துக்கள் நிறைந்த பாட்டில் காட்சியளிக்கும் மேஜைகளைத் தாங்கிக்கொண்டிருந்தது மோதிலாலின் ஆனந்தபவனம் ஒரு காலத்தில். ஆனால் இப்பொழுது? எல்லாம் அடியோடு மாற்றம்.

1921ம் வருஷம் நவம்பர் மாதம் இளவரசர் பகிஷ்காரம் இந்தியாவில் வெகு மும்முரம். தொண்டர்கள் ஸ்தாபனம் சட்டத்துக்கு விரோதமானது என சர்க்கார் ஆர்டர் பிறந்தது. மோதிலால் தன்னுடைய குடும்பத்தாரோடு தொண்டர் ஸ்தாபனத்தில் பதிந்துகொண்டார். இதனால் 1921ம் வருஷம் டிசம்பர் மாதம் கைதி செய்யப்பட்டார். சௌரி சௌரா சம்பவம் காரணமாக காந்திஜி ஒத்துழை

யாப் போரை நிறுத்தினர். சர்க்கார் காந்திஜிக்கு ஆறு வருஷம் தண்டனை கொடுத்து ஜெயிலுக்குத் தள்ளியது. இயக்கத்திலே சோர்வு குடிகொண்டது. இந்த நிலைமையில் 1922ம் வருஷம் ஜூன் மாதம் 7ந் தேதி, காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் லக்னேவில் கூடி, சத்தியாக்கிரக பரிசீலனைக் கமிட்டி ஒன்று நியமித்தது. இந்தப் பரிசீலனைக் கமிட்டிக்கு மோதிலால்தான் தலைவர். தேசமெங்கும் இக்கமிட்டி சென்று பரிசீலனை செய்து, சத்தியாக்கிரகத்திற்குத் தேசம் தயாரில்லையென்றும், சட்டசபைகளுக்குச் சென்று போரிடவேண்டுமென்றும் தெரிவித்தது. சித்தரஞ்சனதாசும் இவருமாகச் சேர்ந்து காங்கிரசுக்குள்ளேயே "சுயராஜ்யப் பார்டி" என்ற ஒரு ஸ்தாபனத்தை யேற்படுத்தினர்கள். காங்கிரசில் மாறுதல் வேண்டாக் கட்சியார், மாறுதல் வேண்டுங் கட்சியார் என இரண்டு பிரிவு ஏற்பட்டது. பண்டித மோதிலால் நேருவினுடைய தலைமையில் சுயராஜ்யப் பார்ட்டியானது மத்திய அசெம்பிளியில் அந்தக் காலத்தில் செய்த எதிர்ப்பு வேலைகளை இந்தியர்கள் மறக்க முடியாது. சட்டசபையில் இவர் பேச எழுந்து விட்டாரேயானல் சர்க்கார் மெம்பர்கள் ஆச்சரியமும் அதிசயமும் அடைவார்கள்.

ஒரு கேஸ் விஷயமாய் பண்டித மோதிலால் நேரு 1927ம் வருஷம் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தார். சோவியத் சர்க்காருடைய அழைப்பிற்கிணங்க, சோவியத் பத்தாவது வருஷோற்சவத்திற்காக மோதிலால் ருஷ்யாவுக்குச் சென்றிருந்தார்.

1927ம் வருஷம் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ், இந்தியாவின் சுதந்திர அரசியல் திட்டத்தைத் தயாரிக்கும் வேலையைக் காரியக்கமிட்டி செய்யவேண்டுமென்று தீர்மானித்தது. இந்தப் பெரிய பொறுப்பை காரியக் கமிட்டியானது மோதிலாலின்மீது சுமத்தியது. இவரால் தயாரிக்கப்பட்ட திட்டந்தான் "நேரு ரிப்போர்ட்" என்ற பிரசித்தம்பெற்றது. 1928ம் வருஷம் கல்கத்தாவில் இவருடைய தலைமையிலே காங்கிரஸ் மகாசபை கூடியது.

லாகூர் காங்கிரசில் பூரண சுயராஜ்யத் தீர்மானம் நிறைவேறியது. பூரண சுயராஜ்யம் அடைவதற்கு சட்டசபைப் போராட்டமா வழி? சட்டசபை அங்கத்தினர் பதவியை உதறியெறிந்தனர். சுயராஜ்யப் பார்டி கலைக்கப்பட்டது. காந்திஜி சத்தியாக்கிரகப் போர் முரசு கொட்டினர். ஜவஹர் கைது செய்யப்பட்டார். அவர் தாங்கியிருந்த தலைமைக் கிரீடத்தை மோதிலால்நேரு தாங்கிக்கொண்டார். கல்கத்தா காங்கிரசில் தனக்குச் சூட்டப்பட்ட கிரீடத்தை லாகூரில் தன்னுடைய மகனுக்குச்சூட்டினர் மோதிலால். ஆனல் கூடிய சீக்கிரம் அதே கிரீடம் அவருடைய புத்திரராலேயே தந்தைக்குச் சூட்டப்பட்டது. தன்னுடைய கையினலேயே உப்புக் காய்ச்சினர். இந்த உப்புக்கு அலகாபாத்தில் நல்ல கிராக்கி யிருந்தது. அந்நிய நாட்டுச் சாமான்களைப் பகிஷ்கரிக்கவும் தேசியத்தை ஆதரிக்கவும் பிரசாரம் செய்தார். சர்க்கார் இவரை

கைதுசெய்து ஆறு மாதத் தண்டனை விதித்தது. ஜெயில் வாசத்தால் இவருடைய உடம்பு கெட்டது. பழைய நோய் தலை காட்டிற்று. நோயின் காரணமாக, சர்க்கார் இவரை விடுதலை செய்தது.

சுக வாழ்க்கையிலே, செல்வத்திலே ஆடம்பரத்திலே பண்டித மோதிலால் நேரு எப்படி முதல் வரிசையிலிருந்தாரோ அப்படியே தியாகத்திலும் முதல் வரிசையிலிருந்தார். தலை நரைத்திருந்தது. ஆனால் அவருடைய உணர்ச்சி நரைத்துவிடவில்லை. கிழட்டுப் பருவம். ஆனால் வாலிப உள்ளம். எதிரிக்கு விட்டுக்கொடுக்கும் சுபாவம் மோதிலாலிடத்தில் கிடையவே கிடையாது. இத் தன்மைகள் நிறைந்த பண்டித மோதிலால் நேரு, 1931ம் வருஷம் பிப்ரவரி மாதம் 6ம் தேதி தேகவியோகமானார்.

"நான் நோயோடு போராடுவேன்; சாவோடு போராடுவேன்; அடிமைத்தனம் என்ற ராட்சதனோடு போராடுவேன்; நான் சாவது நிச்சயம்; ஆனால் பூரண சுதந்திரம் அடைந்த என்னுடைய பாரத தேசத்தின் மடியிலே தான் நான் சாவேன்; அடிமை நாட்டில் நான் சாகமாட்டேன்" என்று நோயுற்றிருக்கும்போது மோதிலால் சொல்லிய வாசகங்கள் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

விஞ்ஞானம், வளர்ச்சியடையாத ஒரு பொருளா? இல்லை. அதனுடைய வளர்ச்சி மனிதனுடைய முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கிறது. விஞ்ஞானம் அபிவிர்த்தியாகி வருகிறதென்றால் மனிதன் அறிவுத்துறையில் முன்னேறி வருகிறான் என்பதே பொருள். ஆனால் சிலர், இந்த விஞ்ஞானத்தையும் முதலாளித்துவத்தையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பி விடுகிறார்கள்.

—மாலடோவ்.

மூன்றாவது வருஷம்
"ஜோதி"யின்
பைண்டு வால்யூம்
இரண்டு புஸ்தகங்களாக
தயாராகிவிட்டது.
விலை ரூபா 4—8—0
தபால் செலவு
பர்மாவுக்கு 0-6-0 இந்தியாவுக்கு 0-8-0
மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு ரூ. 2
தபால் செலவுடன் மணியார்டர் செய்யுங்கள்
ஜோதி பப்ளிஷிங் கம்பெனி, லிமிடெட்
47, 31-வது வீதி, இரங்கோன்.

கலைமகள்

ஓர் உயர்ந்த மாதப் பத்திரிகை

(1932ம் ஞு ஆரம்பிக்கப்பட்டது)

தமிழ் நாட்டிலுள்ள சிறந்த அறிவாளிகளுடைய கட்டுரைகளோடு வெளி வருவது. அழகிய சித்திரங்கள், இனிய கட்டுரைகள், சுவையுள்ள கதைகள் சிறந்த தொடர் கதை, விஞ்ஞான சரித்திரம் சம்பந்தமான விஷயங்கள் முதலிய சகல அருமையான பகுதிகளோடு உயர்ந்த முறையில் அச்சிடப்பெற்று மாதந்தோறும் தவறாமல் மலர்வது.

வருஷ சந்தா :

உள் நாடு :	ரூ. 4-0-0
பர்மா :	ரூ. 4-8-0
வெளிநாடு:	ரூ. 6-0-0

தனிப் பிரதி அணா ஆறு.

கிடைக்கும் விலாசம் :—

மானேஜர், கலைமகள் காரியாலயம்,